Regd No M. 4900 16-பக்கங்கள்.

# குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 ஈரோடு 8-1-1949 சனிக்கிழமை மலர் 18.

## ஒழித்த பிறகன்றோ ஓய்வு.

வினா.

(1) பன்னாளுஞ் செந்தமிழைப் பாடிப்பா டிப்படித்தோம்
என்னாளும் நம்மளவில் ஏற்றமுண்டோ? ஒன்றியநற்
கண்ணான நண்பா கருத்தில் திருத்தங்கொள்
உண்மையாய்ச் சொன்னேன்கொள் ஓய்வு.

விடை.

நல்ல தமிழ்மொழியை நன்கறியா நம்மிடத்துப்
புல்லர் திமிரால் புகுத்துகின்றார்—நல்லோர்
இழித்துப் பழிக்கின்ற இந்திமொழி தன்னை
ஒழித்த பிறகன்றோ ஓய்வு.

வினா.

(2) ஒருமொழி கற்றோன்கீழ் ஊமையோ டொப்பாம்
பெருக இதையுணர்ந்த பின்னர்—ஒருமுகமாய்
இந்திமொழி கற்க இசையாமல் நீயெதிர்த்தால்
எந்தவழி மேன்மை யிசை?

விடை.

ஒருமொழியும் நன்றாய் உணர்ந்த பிறகன்றோ
வருமொழியும் கற்பதினால் வாழ்வாம்—வருமொழியும்
நம்மினத்தார் வாழ்வழிக்க நாடுவதேல் அம்மொழியார்
தம்மினத்துச் சூழ்ச்சிதனைத் தாக்கு.

வினா.

(3) தனித்த ஒருவனுடன் தக்க அழகி
இனித்தமுடன் சேரலன்றோ இன்பம்—தனித்துச்
செழித்த தமிழோடு சேருமிந்தி வந்தால்
பழித்துரைத்தல் ஏனோ பகர்?

விடை.

உன்னைத் தழுவுபவள் ஓயாத நோயுள்ளாள்
பொன்னைப் பறித்துப்பின் போக்கிடுவாள்—அன்னை
தனக்குமுறு துன்புசெரும் தாழ்குணத்தாள்; அப்பெண்
மனக்கினிய தந்தால் மதி.

வினா—புலவர் அழகுவேலன். விடை—புலவர் முடியரசன்.

★

# திராவிடர் யார்?

மக்களினங்களின் பொருட்காட்சி சாலையான இந்தியாவின் சரித்திரத்தைப் படிக்க ஆரம்பிக்குங்கால், மாணவர்களுக்கு மலைப்பும், அதனைச் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியர்களுக்குத் திகைப்பும் ஏற்படுவது இயற்கை. இருண்ட சரித்திரம் என இதனைத் தள்ளிய ஆசிரியர்கள் எவ்வளவு பேர்! அவ்வாசிரியர்கள் சொல்லிக் கொடுத்ததை வேத வாக்காக எடுத்துக் கொண்டு நந்தமிழ் நாட்டையும், நம்மினத்தையும் கேலி செய்யும் கயவர்கள் எவ்வளவுபேர்! இந்தியச்சரித்திரத்தை எழுதிய ஆங்கிலேயரும், அவர்களைப்பின்பற்றிய அய்யர்களும், ஆச்சாரிகளும், சாத்திரிகளும், சர்மாக்களும், தீட்சிதர்களும் தமிழ்நாட்டுச் சரித்திரத்திற்குக் கால் பக்கம் மட்டும் ஒதுக்கி, மீதிப் பக்கங்களில் பல மன்னர்களின் வெற்றிப்பட்டியல்களையும், குணவிசேடக் குறிப்புகளையும் சேர்த்து விட்டனர். தமிழ் நாட்டுச் சரித்திரத்தை மூன்று பக்கங்களிலும், வடநாட்டுச் சரித்திரத்தை முன்னூறு பக்கங்களிலும் எழுதக்காரணமென்ன என வினவின், தமிழ் நாட்டு வரலாறு கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தொடங்கிய தென்பர். வடநாடு உறங்கிக் கிடக்க, மேலை நாட்டு மக்கள் உடுக்க உடையின்றித் திரிந்த அக்காலத்து, நம் திராவிட மக்கள் விண்ணும் மண்ணும் வியக்கச் சிறந்ததொரு நாகரீக வாழ்வினைப் பெற்றிருந்தனர். ஆரியரது வேதங்களையும், புராணங்களையும் ஆதாரமாகக் கொண்டு அவர்தம் நாகரீகத்தினைத் தீட்டும் வரலாற்று ஆசிரியர்களே! தமிழரது இலக்கிய நூல்களைக் கொண்டு அவர்தம் சீர்மலிந்த நாகரீகத்தினை எழுத உம்மால் இயலாதோ? திராவிடரது சிறந்த நாகரீகத்தினை எழுதும் பொற்காலம் வரும்; அன்று நம் இளைஞர்கள் நம் நாட்டைப்பற்றிச் செம்மையாக அறிவர்.

நம் மக்களிற் பலர் திராவிடநாடு வேறு, தமிழ்நாடு வேறு என அய்யுற்றவர்களாய் ஒரு மலரை விட்டு வேறொரு மலருக்குப் பறந்து செல்லும் வண்டின் நிலையை எய்தி விட்டனர். 'திராவிடநாடு' என்று தனியாக ஒரு நாடு இருந்ததில்லை; ஆதலின் 'திராவிடநாடு' என்பதற்குப் பொருளே இல்லை என்கூறுகின்றனர். 'பாகிஸ்தான்' என்று தனியாக ஒரு நாடு இருந்ததா? என்று ஆய்ந்தோர்களை நான் கேட்கிறேன்.

முகலாயர்கள் கி. பி. பதினாறாம் நூற்றாண்டில் தம் பேரரசினை இந்தியாவில் நிறுவினர். பேரரசுக்கான வித்து, பாபர் காலத்தில் நடப்பட்டு, அஃது அக்பர் காலத்தில் நன்கு வளர்ந்து, ஒளரங்கஸீப்பின் காலத்தில் வறண்டு, பின்னர் ஆங்கிலேயரால் வேரோடு களைந்தெறியப்பட்டது. ஆனால் தமிழன் எந்நாளும், எவனுக்கும் அடிமையாக இருந்ததில்லை ஆங்கிலேயரைத் தவிர. அசோகன் ஆண்ட காலத்திலும், ஹர்ஷன் ஆண்ட காலத்திலும், அக்பர் ஆண்ட காலத்திலும் தமிழ்நாடு தனியாகத்தான் இருந்தது. ஆங்கிலேயர் தென்னிந்தியாவில் ஆதிக்கத்திற்காகப் போராடிய பொழுது, நம் நாட்டிற்காகத் தம் உயிரைத் தந்த கட்டபொம்மு, ஊமத்துரையை நாம் மறக்க முடியுமா? இங்ஙனமாக நாடு தேடிவந்த முஸ்லீம்கள் தனிநாடு பெற்று வாழ்வதையும், தொன்று தொட்டு இந்நாட்டில் எவனுக்கும் அடிமையாகாமல் இருந்த நாம் இன்று விலங்குடன் இருப்பதையும் அறிகிறோம். இதற்குக் காரணமென்ன என நோக்குங்கால் நம்மிடையேயுள்ள ஒற்றுமைக்குறைவென்றே புலப்படும். ஒருமையுணர்ச்சியுடன் திராவிடநாட்டு மக்கள் அனைவரும் கொதித்தெழுந்தால், அன்றே நம் இன்பத்திராவிடத்தைக் காண முடியும்.

இனி, நாட்டைப்பற்றிக் காணும் பொழுது கிருஷ்ணா நதிக்குத் தெற்கேயுள்ள நாடு முழுவதும் திராவிட நாடு என்றழைக்கப்படுகிறது.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களும்,

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக்
கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்
பரதகண்டமிதில்
தக்க சிறு பிறை நுதலும் தரித்த
நறுந்திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த
திராவிட நற்றிருநாடும்
அத்திலக வாசனைபோல்
அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க
இருந்த பெருந்தமிழணங்கே"

எனப்பாடியுள்ளார். திராவிட மக்களுள் ஒருவருடன் ஒருவரைப் பொருத்திப் பேசுவதைப் பார்க்கும் பலர் புருவம் நெரிக்கிறார்கள். அவர்களுக்கு அய்யமிருப்பின் இந்திய சரித்திரத்தை ஆய்ந்து பார்க்கட்டும். 'எல்பின்ஸ்டன்' என்னும் சரித்திரப் பேராசிரியர் தமிழ் நாட்டினை, 'தமிழ்நாடு அல்லது திராவிடநாடு' என்றே தமது இந்தியச் சரித்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்தியச் சரித்திர மேதை இரமேச சந்திர தத்தரும் 'பிற்கால இந்துக்களின் நாகரீகம்' என்ற தமது நூலில் தமிழ் நாட்டினையே 'திராவிடநாடு' என்று குறிப்பிடுகிறார்.

திராவிடநாட்டைப்பற்றி ஒப்புக் கொள்ள நேரிடினும், திராவிடர் இந்நாட்டின் பழங்குடிகள் என்பதைச் சிலர் ஒப்புக்கொள்ளார். வடநாட்டுச் சரித்திரத்தை எழுதும் பொழுது இங்கு, "ஆரியர் வருவதற்கு முன் மொகெஞ்சதாரோ, ஹரப்பா நாகரீகத்தில் செழித்திருந்த மக்கள் திராவிடர்கள்;" தக்காணச் சரித்திரத்தை எழுதும் பொழுது, "ஈண்டு சீரும் சிறப்புமுற்று வாழ்ந்த மக்கள் திராவிடர்கள்;" தென்னாட்டுச் சரித்திரத்தை எழுதும் பொழுது, "வீரமும் காதலும் ஒருங்கேயமைந்த இந்நாட்டின் கண் வாழ்ந்த மக்கள் திராவிடர்கள்" என்றெழுதி, முடிவில் தம்மையும் அறியாமல் திராவிடர்கள் வெளிநாட்டினின்று வந்தவர்கள் என முடிப்பர் நம் அருமைச் சரித்திரப் பேராசிரியர்கள். என்னே இவர் தம் சிறுமதி! சரித்திரப் பேராசிரியர்கள் தாம், ஆரிய நாகரீகத்திற்குப் புறம்பான நாகரீகத்தினை எய்தியிருந்த மக்களுக்குத் 'திராவிடர்' என்ற பெயரைச் சூட்டினர். மொழிவாரியாகக்காணின் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய இவ்வைந்தும் திராவிட மொழிகள்; இவற்றைப் பேசும் மக்கள் திராவிடர். திராவிடம் என்னும் சொல்லே தமிழகத்தின் திரிபு என்பது அறிஞர் முடிபு. தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் தமிழுடன் நெருங்கிய தொடர்புடையன வென்று காட்டுவதற்காகத்தான் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களும், 'கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும் துளுவும் உன்னுதரத்துதித்தெழுந்தே ஒன்று பல ஆயிடினும்,' எனப்பாடியுள்ளார். தமிழ் மொழியில் கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னரும், கன்னடத்தில் கி. பி. எட்டாம் நூற்றாண்டிலும், மலையாளத்தில் கி: பி. பதினைந்தாம் நூற்றாண்டிலும், தெலுங்கில் கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டிலும் இலக்கியங்கள் தோன்றின. தமிழர் இந்நாட்டுப் பழங்குடிகள், அதற்குச் சான்றாக இதோ, எமது இலக்கியங்கள் என்று காட்டினால், அவை முற்றிலும் பொய் என்று வாய் கூசாது கூறி விடுகின்றனர்

(தொடர்ச்சி 15ம் பக்கம்)




## காட்சி 19.

[வீதி]

உறுப்பினர்:— சின்னான், சின்னாயி, இராஜன், போலீசார்.

கதை அமைப்பு:— [இராஜன் கைது செய்து கொண்டு போகப்படுவதைச் சின்னானும், சின்னாயியும் கண்டு வருந்துகின்றனர்.]

சின்னான்:- [போலீஸ்காரர்களைக் கண்டு பயந்து ஒதுங்குகிறான்]

சின்னாயி:-[இராஜன் கைதியாகிப்போவதைக்கண்டு திகைப்போடு சிறிது பின் தொடர்கையில், எதிரில் சின்னான் பயந்து ஒதுங்குவதைக்காணவே]

என்சூரப்புலி! வீரப்புருஷனே!!! வெளியேவா!!!

[என்று அவன் காதைப் பிடித்து வெளியே இழுக்கிறாள்.]

சின்னான்:-அடி அடி அடியே! விடுறி விடுறி விடுறி......!!!

சின்னாயி:- (12) [பாட்டு: 'ஆசைவைச்சேன்...' எ. மெட்டு]

மீசை முளைச்ச ஆம்புளை சிங்கம்
மூலையில் ஏன் ஒளிந்தாய்—
மூலையில் ஏன் ஒளிந்தாய்
கோழையாய் ஏன் பிறந்தாய்...(மீ)

சின்னான்:-மீசையில்லாப்
பொம்புளை சிங்கம்
உன்னாசை மாரன் நானே—
உன்னாசை மாரன் நானே
பெண்ணாசைவீரன் தானே...(மீ)

சின்னாயி & சின்னான்:-
ஆணும் பெண்ணும் சேர்ந்த
ஒன்றே
ஒப்பற்ற ஆண்மையாகும்—
ஒப்பற்ற ஆண்மையாகும்
தப்பினால் தீமை ஆகும்......(ஆ)

சின்னான்:-அடியே சின்னாயி! உன் புருஷன் சின்னான்னா...! என்னான்னு நினைச்சுக்கிட்டே...? ஆங்! சிங்கமாம்மே,.....சிங்கம்! அதெல்லாம் காட்டுக்குள்ளே தாண்டி! இந்த நாட்டிலே, எப்படிப்பட்ட சூரனாயிருந்தாலும் சின்னான் பேரைக்கேட்டாலே... 'கெலி' அடிச்சுச் செத்துப்போவாண்டின்னா...

சின்னாயி:-இப்போத்தான் தெரிஞ்சுச்சே அது!

சின்னான்:-என்னாடி தெரிஞ்சுச்சு?

சின்னாயி:- சிவப்புத் தலைப் பாவைக் கண்டவுடனே...நீபோயி பதுங்கிக்கினு இருந்தியே அந்த இடம்.

சின்னான்:-அடச்சீ! நான் அதுகளுக்குப் பயந்து பதுங்கிக்கிட்டேனு நீ நினைச்சுக்கிட்டியோ?

சின்னாயி:- பின்னே என்னவாம்...?

சின்னான்:-சேச்சே! அதெல்லாம் ஒன்னுமில்லே குட்டி! எங்கேயாவது யாராவது ஒன்னுக்கிருந்திருப்பான்; எங்கப் போலீசாவது யாரையாவது பிடிச்சு இழுத்துக்கிட்டுப் போகும், அந்தச் சமயத்திலே அவுங்க கண்ணுலே நான் போயி மாட்டிக்கிட்டேன்னா நீயும் வாடா சாக்கி சொல்லணும்னு பிடிச்சு இழுத்தாலும் இழுப்பாங்க! இந்தச் சனியனுலாம் நமக்கென்னத்துக்குனு நான் சும்மா அப்படி ஒரு ஓரமாப் போனாக்கா...

சின்னாயி:-ஆமாங்! அந்தப் போலீசுங்க புடிச்சுக்கிட்டுப் போகுதுங்களே! அதை யாருனு பாத்தியா?

சின்னான்:- அதையெல்லாம் போயி நான் ஏங்குட்டி பாத்துக்குனு இருக்கப் போறேன்?

சின்னாயி:- அய்யே...! அவரு நம்ம விமலாம்மா கூடப் பள்ளிக்கூடத்துலே படிச்சுக்குனு திரிஞ்சாரே! அவரு மாதிரியே இருந்துச்சே...!

சின்னான்:-ஆங்! அய்யோ...!! அவரு போன மாசந்தானே மில் லாபீஸ்லே வேலைக்கு வந்தாரு...!!!

சின்னாயி:-ஆமாமா......அவரே தான்!

சின்னான்:-அய்யய்யோ! ஓடிவா குட்டி...போயி...பெரிய எசமான் கிட்டேச் சொல்லுவோம்.........

[என்று ஓடுகின்றனர்]

## காட்சி 20.

[முதலியார் வீடு]

உறுப்பினர்:- முதலியார், சின்னான், பத்மா, விமலா, விஸ்வன்.

கதை அமைப்பு:— [இராஜன்மீது சுமத்தப்பட்ட அபாண்டப் பழியை அறிந்த விமலா மூர்ச்சையடைகிறாள்; விஸ்வன் அந்தச் சமயம் அங்கு வந்து விமலா தன்னிடம் நடந்து கொள்ளும் முறையைக் கண்டித்துக் கூறுகிறான்.]

முதலியார்:-[மிகப் படபடப்புடன்] அடேய் சின்னான்...டேய் சின்னான்.

சின்னான்:- எசமான்...[என்று அலறிக்கொண்டோடி வருகிறான்]

முதலியார்:- அவசரமாக போயி...

சின்னான்:-[அவசரமாக ஓடுகிறான்.]

முதலியார்:-அடடடே...! என்னடா அது சங்கதியைச் சொல்றதுக்குள்ளேயே ஓடுறியே...?

சின்னான்:-[திரும்பி ஓடிவந்து] சொல்லுங்க எசமான்!

முதலியார்:-போயி விமலாவைக் கூட்டிக்கொண்டு வாடா....

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

கதை கற்பனை.

சிறுகதை

மூன்றாம் பருவம்

# கற்சிலை!

போட்டி

எண் 4.

ஆடுகள் வரிசையாக நிற்கின்றன. மக்கள் மகிழ்ச்சியுடன் மண்டியிட்டு வணங்கி நிற்கின்றனர். கோவில் பூசாரி கோவிந்தப்பன் கையில் பளபளவென மின்னும் கத்தியுடன் சித்தமாக நிற்கிறார். அன்று காட்டுமல்லூரில் காளியம்மன் திருவிழா.

ஆடு ஒவ்வொன்றாக வருகிறது, ஒவ்வொன்றின் தலையும் ஒரு வீச்சில் வீழ்கிறது. ஆடு துள்ளிக் குதித்து மாள்கிறது. காளிக்குப் பிரார்த்தனைகள் வந்து குவிகின்றன. "அம்மா! காளி! என் மகன் சிரங்கு வலியால் துள்ளுகிறான், அதை நிறுத்தினால் அடுத்த வருஷம் ஓர் ஆடு துள்ளத் துள்ள பலி தந்து உன் பசி தீர்க்கிறேன்'' என்பதுபோன்று பல விதத்தில். காளி, ஆடுகள் வெட்டுண்டு வீழ்வதைக்கண்டு மகிழ்ச்சி கொள்ளவில்லை! துள்ளி வீழ்வதைக்கண்டு துக்கமும் கொள்ளவில்லை. அசையாமல் கோரத்துடன் ஜடமாய்த்தான் நின்றாள்.

பூசாரியின் மகள் பொன்னிக்கு அங்குள்ள வேடிக்கைகளில் நாட்டமில்லை, அவள் நாட்டமெல்லாம் அம்மன் முன் ஆட்டம் போடும் மக்களுடன் வேப்பங் கொத்தைக் கையில் பிடித்து ஆடிக்கொண்டிருக்கும் அங்கப்பன் மீதுதான்.

ஆடுகள் அனைத்தும் பலியாகி, ஆட்டமெல்லாம் ஆன பிறகு, மாலைப்பொழுதின் மந்தாரவெயிலில் பூத்துக்குலுங்கும் பூக்களைப் பறித்து, ஆரம் தொடுத்து, அம்மனுக்கு அணிவிக்கும் பணியில் பொன்னியின் கைகள் ஈடுபட்டுப் பின்னிக்கொண்டிருந்தன.

"பொன்னி.........'' என ஓர் குரல் பரிவுடன் அழைத்தது. திடுக்கிட்டுத் திரும்பினாள், ஆவலுடன் பார்த்தாள், நங்கை இ..த்தின் நாணம் தலை குனிய வைத்தது.

"பொன்னி...'' என உணர்ச்சியுடன் கூறினான் அங்கப்பன். பொன்னியும் பேச வாயெடுத்தாள்; ஆனால் வாய் பேசவில்லை. பொன்னியின் மனதையும் அங்கப்பன் அறிந்தான். மெல்ல அவள் கையைத் தொட்டான். இருவரையும் மின்சாரம் போன்ற உணர்ச்சி தாக்கிற்று. அவள் தன் கையை உதறவில்லை. கையைச் சுண்டி இழுத்தான். அழைப்புக்கு ஆவல் இடம் கொடுத்தது, நாணம் தடுத்தது. யாரோ வரும் சப்தம் கேட்கவே அங்கப்பன் அவள் கையை விடுமுன் அவளே உதறிக்கொண்டாள். 'இன்று இரவு' என்று அவன் சொன்னதை ஆதரிப்பவள் போல் தலையை ஆட்டிவிட்டு ஆரத்துடன் ஓடிவிட்டாள்.

* *

பகலில் கும்மாளமடித்தும் கூத்தாடிக்கொண்டும் இருந்த அதே இடத்தில் பாசிப் பூச்சியின் 'சிர்ர்......' என்ற சப்தத்தைத் தவிர வேறு இல்லை அவ்விரவில்.

"நீங்கள்! வெகு நேரமாகக் காத்திருந்தீர்களா?'' என்ற பொன்னியின் இனிய குரலைக் கேட்டு அங்கப்பன் திரும்பினான். அவன் முகத்தில் மகிழ்ச்சி நிரம்பியது.

"இல்லை! இப்போதுதான் வந்தேன் நீயும் வந்துவிட்டாய். ஆமாம்! வீட்டில் உங்கப்பா இருந்திருப்பாரே!''

"காளிப் பூசை போட மயானத்திற்குச் சென்று விட்டார்''

"அதுதானே மயானத்திற்குப் போய்விட்டாரா...?''

"ஆமாண்டப்பா! ஆமாம்! மயானத்திற்குக் காளிப் பூசை போடப் போகல்லே. காளி கோவிலிலிருந்தே உன்னை மயானத்துக்கு அனுப்பலாம்னு வந்தேன். ஏண்டா! தோட்டத்திலே நடந்ததை நான் பார்க்கலைன்னு நெனச்சுட்டியா? என்ன துணிச்சல் என் மகளைத் தொட! இந்தச் சிறுக்கியும் ஒத்துக்கிட்டாளே!'' என்று கோபக்கனல் வீச நின்றார் பொன்னியின் தகப்பனார் பூசாரி கோவிந்தப்பன். இருவரும் சிலைபோல் மலைத்துவிட்டனர். பூசாரியின் கையில் பகலில் ஆடுகளைப் பலி வாங்கிய கத்தி மின்னியது. "அப்பா!'' என்று தடுத்தாள் பொன்னி, ஆனால் அது நடக்கவில்லை. அவன், அன்று பிறந்த காதலுக்கு அன்றே பலியானான். அங்கப்பனின் குருதி ஆட்டுக் குருதியுடன் கலந்தது. காளியும் இதைப் பார்த்து எப்போதும்போல் விரித்த கைகளுடன் விகாரமாகத்தான் இருந்தாள்.

* *

மறுநாள் காலை, அங்கப்பனை அம்மன் தானே பலி வாங்கிக் கொண்டாதாகக் காட்டுமல்லூரில் விஷயம் காற்றாய்ப் பறந்தது. இதைப் பூசாரியே சொன்னார் 'ஆவேசம்' வந்து அதன் வாயிலாக. அங்கப்பனின் உடல் கோவிலின் அருகிலேயே புதைக்கப்பட்டது. அங்கப்பன்புனிதனானான் ஊராருக்கு, பூசாரிக்கு துரோகி, பொன்னிக்கு நல்லவன், காளிக்கு என்னவோ!?

* *

பொன்னிக்கும் பூசாரியின் அக்காள் மகன் வேலனுக்கும் காளிக்கு முன்பே திருமணம் நிகழ்ந்தது.

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

---

4—1—49
பேரம்பூர்.

அய்ய! வணக்கம்.

இரண்டாம் பருவப் போட்டியில் 2-வது கதையான எனது கதையைத் தேர்ந்தெடுத்துத் தாங்கள் அனுப்பிய பரிசுத் தொகை ரூ. 50/-யும் செக் மூலமாகப் பெற்றுக்கொண்டேன். மிக்க வந்தனம். என் கதைக்கு ஆதரவு தந்த அனைவருக்கும் என் நன்றி உரித்தாகுக.

தங்களன்புள்ள,

[Sd] T. V. Ramasivam.

# விடுதலை வீரன்!

★

"கார்க் நகர மேயரைச் சுட்டுக் கொன்றதுபோல் எல்லோரையும் சுட்டுக் கொன்று விடுவோம் என்று பயமுறுத்திக்கொண்டு திரிவதாக அறிகிறோம். அந்தப் பயமுறுத்துதலுக்குத் தக்க பதிலளிப்பதுதான் எங்கள் கடமை. எங்கள் நாட்டின் சுதந்தரத்தையும், மதிப்பையும், அயர்லாந்தின் குடிஅரசின் அமைதியையும், ஆனந்தத்தையும் நிலைநிறுத்துவதான ஒரே நோக்கம் நிறைவேறுவதற்காக, நாங்கள் பயமுறுத்தலுக்குப் பயங்கொள்ளாமல், உறுதியைக் கைவிடாமல் இருக்கவேண்டு மென்பதே எங்கள் பதில். அந்த குறிக்கோளுக்காகவே நான் இருக்கிறேன்.

எங்களுடைய இந்தப் போராட்டத்தில் பகைமையோ, பழிவாங்கும் எண்ணமோ இல்லை. சகிப்புத்தன்மைதான் எங்களுடைய போராட்ட ஆயுதம். எவர் அதிகத் துன்பத்தைக் கொடுக்கிறாரோ அவர் வெற்றி கொண்டுவிட முடியாது. எவர் அதிகத் துன்பத்தைச் சகித்துக்கொள்கிறாரோ அவரே முடிவில் வெற்றியடைவர்......''

இது, ஆங்கில நாட்டினால் அடிமைப்படுத்தப்பட்டு, அடங்கிக் கிடந்த அயர்லாந்து நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் முன்னின்று, உயிரையே அயர்லாந்துக்காகத் தியாகம் செய்த வீரன், டெரன்ஸ் மாக்ஸ்வினி, 1920-ம் ஆண்டு ஆகஸ்டு 12-ந்தேதி கடைசி முறையாகச் சிறைசென்று கூறிய வாசகங்கள். ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆயுதமாக அமைவது தியாக மனப்பான்மையும், சகிப்புத் தன்மையும்தான் என்பது மாக்ஸ்வினியின் சித்தாந்தம். மாக்ஸ்வினியின் சகிப்புத்தன்மைதான் பிறகு அயர்லாந்து நாடு ஆங்கில ஏகாதிபத்தியத்திலிருந்து அகல ஏதுவாகவிருந்தது.

அயர்லாந்து மிகச்சிறிய நாடாக இருந்தாலும் அது ஆங்கில நாட்டோடு ஒன்றுபட்டு வாழ விரும்பவில்லை. அயர்லாந்து மக்கள் விடுதலைவேண்டி கிளர்ச்சி செய்தனர். அக்கிளர்ச்சியை ஆங்கில ஏகாதிபத்தியம், அடக்கி ஒடுக்கப் பலவகையாலும் அடக்கு முறை ஈட்டிகளைக் கிளர்ச்சிக்காரர்களின்மேல் பாய்ச்சி வந்தது. சுட்டுக் கொல்வதென்பது சர்வசாதாரணமாக நடந்து வந்த செயல்களில் ஒன்று. அதன்படிதான் கார்க் நகர மேயர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சுட்டுக்கொல்லப்பட்ட மேயர் பதவி காலியானதற்குத்தான், அயர்லாந்தின் விடுதலை வீரன் மாக்ஸ்வினி தேர்ந்தெடுக்கப்பட்டார். மாக்ஸ்வினி, பதவி வேண்டி மேயர் பதவியை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அயர்லாந்தின் விடுதலைக்காகப் போரிட்டு, உயிரைத் தியாகம் செய்வதற்கு மேயர் பதவி ஏற்றதாக இருந்த காரணத்தால் மாக்ஸ்வினி மேயர் பதவியை ஏற்றுக் கொண்டார். கார்க் நகர மேயராக வருபவர்கள்தான் ஆங்கிலச் சதிகாரர்களால் சுட்டுக்கொல்லப்படுகிறார்களே! அதனால் அந்தச்சுட்டுக்கொல்லப்படும் பதவியை மாக்ஸ்வினி விரும்பினார் என்பதில் ஆச்சரியமில்லையல்லவா?

அயர்லாந்தில் கார்க் நகர மேயர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்றால் அதில் அர்த்தமில்லாமலில்லை. அயர்லாந்தின் விடுதலை உணர்ச்சியைக் கிளப்பிவிட்டதே கார்க் மாவட்டந்தான்! அதிலும் மாக்ஸ்வினியின் குடும்பம் பரம்பரையாக விடுதலையை விரும்பிக் கிளர்ச்சி செய்து வந்தது. மாக்ஸ்வினி மட்டிலும் அந்தப் பரம்பரைக் குணத்திலிருந்து விலகிவிட முடியுமா?

மாக்ஸ்வினியின் குடும்பம் செல்வத்தில் செழித்து வளரவில்லை. ஏழைக் குடும்பந்தான்; அதுவும் மிகப்பெரியது. பொருளாதாரத்துறையில் தான் மாக்ஸ்வினியின் குடும்பம் ஏழையாக இருந்ததே தவிர, விடுதலை உணர்ச்சியில் மிக ஓங்கியிருந்தது. குடும்பக் கஷ்டத்தினால் மாக்ஸ்வினி அதிகம் கல்வி கற்க இயலவில்லை. சொற்ப படிப்போடேயே திருப்தி கொள்ள வேண்டி நேர்ந்தது. இருப்பினும் அவர் தம் காலத்தை வீணே கழிக்கவில்லை. குடும்பத்தைக் காக்க வேண்டி வேலை செய்துகொண்டே, தம் படிப்பைத் தொடர்ந்து வந்தார், அதனால் பிறகு கல்லூரிப் பரீட்சையில் தேறிப்பட்டமும் பெற்றார். இவர் தனது விடுதலை உணர்ச்சியை அப்படியே எழுத்தின் மூலமும் பிரதிபலிக்கச் செய்வார். கவிகள் இயற்றியும், நாடகம் எழுதியும் கொள்கையைப் பரப்புவதில் இவர் சிறிது நேரத்தைக் கூட வீணாக்கவில்லை.

அயர்லாந்து மக்கள் மாசுபடிந்தவர்களாகக் காணப்படுவதற்கு, அடிமை உணர்ச்சிதான் காரணம். அதனால் அவர்களிடமுள்ள அடிமை உணர்ச்சியை அகற்றி விடுதலை உணர்ச்சியை ஊட்ட வேண்டுமென்று அவர் மிகக்கஷ்டப்பட்டார். ஏனென்றால் "அயர்லாந்து மக்களும், ஆங்கிலேயரும் ஒன்றுதான். பிரிவினை உணர்ச்சிகூடாது. ஆங்கிலமே பொதுமொழி, அதைப்புறக்கணிக்கக்கூடாது'' என்று ஒரு கூட்டத்தார் பிரச்சாரம் செய்து வந்தனர். இவர்கள் ஆங்கிலேயருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு அயர்லாந்தை ஆங்கில நாட்டிலிருந்து பிரிக்கக்கூடாது என்ற கொள்கையில் மாக்ஸ்வினியின் கட்சிக்குஎதிர்ப்பிரச்சாரம்செய்துவந்ததால் மக்களை உடனே அயர்லாந்தின் குடிஅரசுப் படையில் சேர்ப்பது கடின

GOLDEN SWAN BRAND

வியாபாரிகளுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்

குறைந்த விலை ★ உயர்ந்தசரக்கு

தேர்ந்த ஆட்களைக்கொண்டு மெஷீனரியாலும் எலக்டிரிக் பவர்களினாலும் மேல் நாட்டு சரக்குகளைப்போல் பல வர்ணங்களில் தயாரித்து விலையையும் குறைத்திருப்பதால் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம். 100க்கு 100 கலர் கியாராண்டி.

| | | |
|---|---|---|
| சில்க் பைபிங் | Dz. | 6—0—0 |
| No. 80 | கிடா மார்க் | 5—4—0 |
| No. 60 | கோல்டன் சவரன் Dz. | 4—4—0 |
| No. 40 | சிங்கம் மார்க் | 3—4—0 |

ஸ்டாக்கிஸ்ட் ஏஜண்டுகள் எங்கும் தேவை!

எல்லெண்டி பியாஸ் பைடிங் கம்பெனி,

அக்ராரம் தெரு, ஈரோடு.

மாகவேயிருந்தது.

அயர்லாந்தின் குடி அரசுக்கட்சி வளர வளர, ஆங்கில நாட்டைத் தாய் நாடாகவும், ஆங்கிலத்தைத் தாய்மொழியாகவும் விரும்பிவந்தவர்கள் பழித்துரைக்கப்பட்டனர். இதனால் மக்கள் சிறிது சிந்திக்கத் தலைப்பட்டனர். இதே சமயத்தில் அயர்லாந்து மக்களின் தாய் மொழியாகிய கெயிலிக் மொழியை மக்களின் சிந்தனைக்கு எட்டும்படி செய்யும் பொருட்டு கெயிலிக் இலக்கியக்கழகம் ஒன்றை கார்க் நகரில் தோற்றுவித்தார். பிறகு இது, அயர்லாந்தில் பரவாத இடமேயில்லை. இதை மாக்ஸ்வினி, தன் பதினேழாவது வயதில் செய்து முடித்தார்.

மாக்ஸ்வினி, அயர்லாந்தின் குடி அரசுப்படையில் ஒரு தளபதியாக இருந்து வந்தார். அயர்லாந்து மக்கள் தாய்மொழியிலேயே பேசவேண்டுமென்பதில் மிகவும் பிடிவாதமாக இருந்து வந்தார். அயர்லாந்தின் குடி அரசுப்படையிலிருக்கும் ஒவ்வொருவரும் ஒரு மோதிரத்தை அணிந்து கொள்ளவேண்டும். அந்த மோதிரம் அணிந்திருப்பவர் அனைவரும் அயர்லாந்தின் தாய்மொழியிலேயே பேசுவார்கள் என்பது பொருள். இந்தக் கொள்கை கொண்ட மாது ஒருத்தியையே மாக்ஸ்வினி பிறகு மணந்து கொண்டார்.

மாக்ஸ்வினி, பல தடவை சிறை சென்றிருக்கிறார். இவரது திருமணமும் சிறையிலேயே நடந்தது. அயர்லாந்தின் விடுதலைக்காகச் சிறை சென்று, சிறைக்கூடத்தையே திருமணக் கூடமாக ஆக்கிக் கொண்ட பெருமை டிரென்ஸ் மாக்ஸ்வினியைத்தான் சேரும் என்றால், மாக்ஸ்வினியின் சுதந்தர உணர்ச்சியை அளவிட்டுக் கூறமுடியுமா? மாக்ஸ்வினி 1916ல் சிறையிலிருந்தபோது அரசியல் கைதிகளைப் பார்ப்பதற்கென்று பலர் வந்தனர். அவர்களுள் பல பெண்களுமிருந்தனர். அப்பெண்களில் ஒருத்தியை மாக்ஸ்வினி மணந்தார். அவரது திருமணச் சடங்குகூட அயர்லாந்தின் தாய்மொழியிலேயே நடந்தது. மணமகன் சிறைக்குள், மணமகள் வெளியில். திருமணம் முடிந்தது. எந்த நாட்டிலும் சுதந்தர வரலாற்றில் இடம் பெறாத சம்பவம். திருமணம் முடிந்ததும் மணமகள் வீட்டுக்குத் திரும்பிப் போய் விட்டாள். திருமணம் நடந்த போது மாக்ஸ்வினி, தன்னை மணப்பவளின் பெயரை மட்டிலுந்தான் அறிந்திருந்தார்.

மாக்ஸ்வினி அயர்லாந்துக்காக ஐந்து தடவை சிறை சென்றார். அவரது திருமணத்திற்குப்பின் சில நாள் கழித்து விடுதலை செய்யப்பட்டார். தன் மனைவியுடன் சில நாட்களே தங்கியிருந்தார். திரும்பவும் குடி அரசுக் கட்சியில் முழுப்பங்கு கொண்டு வேலை செய்தார். அவரது மனைவி, தன்னைத் திருமணம் செய்துகொண்டு சில நாட்களேயாகின்றன, இன்னும் சில நாட்களுக்காவது கட்சியினின்றும் விலகியிருக்கும்படி வேண்டினாள். ஆனால் மாக்ஸ்வினி மறுத்துவிட்டார். பிறகு திரும்பவும் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார். சிறை சென்று சில மாதங்கள் கழித்துத்தான் அவரது மனைவி ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். குழந்தை பிறந்து ஒன்பது மாதங்கள் கழித்து மாக்ஸ்வினி விடுதலைசெய்யப்பட்டார். பிறகுதான், அவர், தன் அருமைக் குழந்தையைப்பார்க்க முடிந்தது. சிறையிலிருக்கும் போதே திருமணம் செய்து கொண்ட மாக்ஸ்வினிக்கு, சிறையிலிருக்கும்போதே குழந்தை பிறந்தது! உலக வரலாற்றிலேயே கேட்டிராத ஆச்சரியமல்லவா?

கடைசிமுறையாக மாக்ஸ்வினி 1920 ஆகஸ்டு 12-ல் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். பிறகு அவர் விடுதலையாகவேயில்லை. அவர் கடைசிமுறையாகக் கைது செய்யப்பட்ட போதுதான் கார்க் நகரமேயர் பதவியை வகித்து வந்தார். கார்க் நகரத்தின் மேயராக உட்காருவதென்றால் பலிபீடத்தில் உட்காருவதென்று அர்த்தம். கடினமானதல்ல; ஆபத்தானது.

அவரது கடைசிச் சிறைவாசத்தின் போது, ராணுவக்கோர்ட்டாரால் விசாரிக்கப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். கடைசிக்காலம் வரையில் அவர் தனது உறுதியையும், கோட்பாட்டையும் விடவேயில்லை.

"நீங்கள் எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுக்கலாம்; ஆனால் உங்கள் தண்டனையை நான் அனுபவிக்கப் போவதில்லை. ஏனென்றால், அதற்குள் நான் விடுதலையடைந்து விடுவேன்" என்று விசாரணையின் முடிவில் அவர் கூறினார். "அயர்லாந்துக்காகச் செய்யும் தொண்டு கண்ணீருடனிருக்கக் கூடாது. ஆனந்தத்துடனிருக்கவேண்டும்" என்பது அயர்லாந்து மக்களுக்கு மாக்ஸ்வினி கூறிய வீர வாசகம்.

விசாரணையின்போது மாக்ஸ்வினி இங்கிலாந்தில் பிரிக்ஸ்டன் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். விசாரணை நடந்துகொண்டிருக்கும்போதே உண்ணாவிரதம் ஆரம்பித்தார். 74-நாட்கள் உண்ணாவிரத மிருந்து சிறையிலேயே உயிரைவிட்டார். அவர் இறக்கும் வரையில் சிறையின் கதவு திறக்கப்படவேயில்லை. அயர்லாந்துக்காக உயிரையே தியாகம் செய்த வீரனின் உயிர், உடலிலிருந்து பிரிந்து போகும் வரையில் கூட இங்கிலாந்து நாட்டின் ஒரு பிரஜையாவது, மாக்ஸ்வினியின் உயிர்போவதைத் தடுக்கவேயில்லை.

மாக்ஸ்வினி இறந்த பிறகுதான் அவரது தியாகத் தன்மையும், வீரத் தன்மையும் உலகத்திற்குத் தெரிந்தது. மாக்ஸ்வினியின் மரணத்தை அமெரிக்கப் பொதுமக்கள் அறிந்து, மரணத்தின் வரலாறு முழுவதையும் அறியும்பொருட்டு ஒரு பஞ்சாயத்தை அனுப்பியிருந்தனர். மாக்ஸ்வினியின் மனைவியும், அவரது சகோதரி மேரியும் விரிவான வாக்குமூலம் கொடுத்தனர். இந்த வாக்குமூலத்தைக் கொண்டுதான் மார்க்ஸ்வினியின் குடும்பத்தைப் பற்றியும், மாக்ஸ்வினியைப் பற்றியும் அவர் அயர்லாந்துக்காகச் செய்த தியாகத்தைப்பற்றியும் உலகத்திற்கு அறிமுகமாக்கி வைத்தனர், அந்த அமெரிக்க பஞ்சாயத்தார்.

மாக்ஸ்வினியின் சித்தாந்தங்கள் மிகவும் உயர்ந்தவை. அவைகள் உலகப் பொதுச்சொத்து என்று பிறகு தெரியவந்தது. வாழ்க்கை வாழ்வதற்கே என்ற அசையாத நம்பிக்கையைக்கொண்டவர், ஆனால் பிரிஸ்டன் சிறையில் தன் உடல் அணு அணுவாய்த் தேய்ந்து மடிவதற்கல்ல என்பது மாக்ஸ்வினிக்கு நன்றாகத் தெரியும். அவர் வாழ்வை வெறுத்து அவ்விதம் செய்யவில்லை. மனைவி மக்களோடு கூடி இன்பமாக வாழவேண்டும் என்றுதான் அவரும் எண்ணினார். ஆனால் அடிமை நாட்டில் மக்கள் எவ்வளவு போக போக்கியங்களுடன் வாழ்ந்தாலும் பிணத்திற்குச் சிங்காரம் செய்வது போன்றது என்று அவர் எண்ணினார். அயர்லாந்தின் விடுதலை என்ற பெரிய லட்சியத்திற்காக தன் மனைவி மக்களை விட்டுத் தன் உயிரை அர்ப்பணிப்பது சிறிய லட்சியமென்றே கருதினார். தன் ஒருவனுடைய வாழ்வைச் சிதைத்தாவது அயர்லாந்து மக்களின் மேலுள்ள அடிமைத் தளை அறுத்தெறியப்படட்டும் என்பதே அவரது தேர்ந்த நம்பிக்கை. அதன் பொருட்டு எதையும் அவர் லட்சியம் செய்யவில்லை.

மாக்ஸ்வினி கார்க் நகர மேயராக இருந்த காலம் வரையில், ஒரு நாளின் பெரும் பகுதியை நகர சபை அலுவலகத்திலேயே கழித்து வந்தார். வீட்டிலே அவர் தங்குவது சிலமணி நேரங்களே. அந்தச் சிலமணி நேரங்களையும் தன் அருமைக் குழந்தையுடன் விளையாடுவதிலேயே கழித்து வந்தார். அவர் தன் குழந்தையிடம் கொண்டிருந்த பாசம் மிகப்பெரிது. ஆனால் அவர் தன் குழந்தையுடன் கொஞ்சிய நாட்கள் மிகச்சிலவே.

மாக்ஸ்வினியைப் பற்றி அவரது மனைவி கூறும்போது, "அவருக்குத் தன் குழந்தையிடம் அதிகப் பிரியம். வேறு எதைப்பார்க்கிலும் தன் குழந்

# சதுரங்கம் ஆடுகிறார்கள்—சரியான மந்திரிகள்!

★

"பகடை பன்னிரெண்டும், ஈரேழு, மூணத்தொண்ணும், ஒரு இரண்டும் விழுந்திருக்கு..."

"ஏன். சாமி. அந்தக்காயை ஒரு ஏழுக்கு நகத்துங்க..."

"வேண்டாம் ஸார்! இரண்டுக்கு அதை நகத்திப்பிட்டு, ஈரேழுமூணத்தொண்ணுக்கு இதை இறக்குங்களேன்..."

"முடியாது...வேண்டாம். நான் விரும்புறபடிதான் காய்களை நகத்தப்போறேன்..."

"எங்களுக்கென்ன உங்கள்காய்தான் அடிபட்டுப்போகும். கழுத்துக்குக் கத்தி ம்ாதிரி அவங்க காய் முன்னாலே நிற்கிறது."

"பரவாயில்லை..."

"எங்களுக்கென்ன குட்டிச்சுவராப் போகட்டும்!"

"டே! எனக்கில்லாத சாமர்த்தியம் எதுடா உங்களுக்குச் சதுரங்கம் ஆடுறதில்லே. மடையன்கள்! எனக்குத் தெரியும் எந்தக்காயை எப்படி நகத்துணா சுலபமா வெற்றி கிடைக்கும் என்று. நீங்க சும்மாகிடங்க..."

* *

உறுமுகிறார் கனவான், போயிலையை மடித்து வாயுள்ளே திணித்தபடியே. பகடை உருட்டுவதிலே தனக்கிருக்கும் பழக்கமே போதுமென்று, தைரியமாகப்பேசுகிறார். உண்மையை உணர மறுக்கிறார். இருந்தாலும் சுலபமாக வெற்றியடைந்திடுவேன் என்று கூறுகிறார்; பகடை அவர் கேட்டபடி எல்லாம் உருளுகின்ற காரணத்தால். இல்லாவிட்டால் பகடை நல்லசாமிச் செட்டியாரென்ற பட்டப்பெயர் அவருக்கு வந்திருக்குமா?

* *

இது மூலைத்தெருவிலே மாடிவீட்டிலே, நாலுபேர் சந்திக்கும் போது எந்த ஊரிலும் சாதாரணமாக நடக்கும் சிறுவிஷயம். ஆனால், இதேபோல் ஒரு நாட்டை ஆளவந்த மந்திரிகளும் நடப்பது என்பது நம்பமுடியாத காரியம். நாட்டின் நலத்திலே கருத்துக் கொண்ட மனிதத் தன்மை படைத்த எவரும், நாட்டுமக்களை உருட்டும் பகடைக்கேற்ற உதவாக் காய்களாகக் கருதமாட்டார்கள். கருதுபவர்கள் நாட்டின் தலைமைப் பதவிக் கேற்றவர்களாக இருக்கமாட்டார்கள். ஆனால் அரசாங்கப் பகடை நம்மிடம் தானே இருக்கிறது என்று, நாட்டு மக்களின் நிலையைத் திடீரென்று உயர்த்துவதும், தாழ்த்துவதுமாக "விளையாடும்" சிலர் நமது அரசியலிலே இருக்கின்றார்கள். இதை எடுத்துக் கூறுவதற்காக நம்மை அவர்கள் தண்டிக்கலாம். ஆனால் அவர்கள் உண்மையை மறைக்கமுடியாது. என்ன இருந்தாலும் சத்தியத்தைக் கைப்பிடித்த சாந்த சொரூபிகள் அல்லவா!

* *

நம்ம இலாகாவிலே நாளைக்கு ஒரு உத்திரவு புதிதாப்போடவேண்டும்...

என்ன சொல்கிறீர்கள் நாளைக்கா! யாருக்கு?

சும்மா கிடங்காணும். அடிக்கடி உத்தரவு போடுறதுன்னா யாருக்குப் போடுவாங்க, அதுவும் நம்ம இலாகாவிலே... இது தெரியாமே நீரும் எங்கிட்டே வேலை பார்க்கிறீரே, இரண்டு வருஷமா...

இல்லைங்க...ம்ம்...தமிழ்ப்...பண்டிதர்களுக்குத்தானே!

சபாஷ்! நல்ல மனுஷனய்யா நீர்! நம்ம விஷயம் தெரிஞ்சிருந்தும், தெரியாதவர் மாதிரி நடிக்கிறீரே...ஆனால் தமிழை...

ஆமா, ஆமா...தமிழை இழுக்கப்படாது. அதை எப்பவும்போலச்சிறந்த மொழி, முதல் மொழியாக்கிவிட்டோம், கலைக்களஞ்சியம் தயாரிக்கிறோம் அப்படி இப்படின்னு மேடையிலே பேசிக்கிட்டே இருக்கவேண்டும். பொதுவா பண்டிதர்களுன்னு போட்டு, அதுவும் புதிது புதிதாப் பகுத்தறிவோடே வருகிற பண்டிதர்களை மட்டும் பாதிக்கிறாப்பிலே ஒரு உத்திரவு போடணும்...சம்பள விஷயத்திலே...

கையை வைக்கணும். அப்படிச் சொல்லும். என் மனதிலே இருக்கிறதை முன்னமேயே தெரிஞ்சு வச்சிருக்கிறீரே...

ஆமாம்! 15—3—48-ல் ஒரு உத்தரவுபோட்டோமே ஜி. ஓ. நெ. 526-ன்படி பண்டிதர்களுக்குச் சம்பளம் ரூ. 60—தொடக்கமுன்னுட்டு. அது..:

அதுக்கு என்னய்யா. அன்றைக்கு அப்படிச் செய்தா, இன்றைக்கு இப்படிச் செய்யக் கூடாதுன்னு எந்தச் சட்டமய்யா சொல்லுது, இல்லை யாரு கேட்கிறவன் நம்மளை...

ஆமா, ஆமா! எதையாவது போட்டு ஒரே அடியா அடிச்சா பழைய நிலைதானாத் திரும்புது...

* *

சில மாதங்களுக்கு முன் மேற்கண்ட உரையாடல் எங்காவது அரசியல் வட்டாரத்தில் நடந்திருக்கவேண்டும் என்று, நம்பத் தகுந்த வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்பட்டதாகச் செய்தி ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் நம்போன்ற பலருக்கு இப்படி ஏன் நடந்திருக்கக் கூடாது என்ற சந்தேகத்தை ஒரு சந்தர்ப்பம் கிளப்பிவிட்டிருக்கிறது.

பகடை உருட்டும் பணக்காரர் எப்படியும் இருக்கலாம். அது கண்டு நாம் பதைக்கத் தேவை இல்லை. ஆனால் நாட்டு மக்களின் நலத்திலே நாட்டங்கொள்ள வேண்டியவர்கள் "நல்லசாமிச் செட்டியாராக"-பகடை உருட்டும் பணக்காரராக இருக்கக்கூடாது என்பது முழு உண்மை. இருந்தால் நகைப்பிற்குரியது மட்டும் அல்ல, நன்றாகச் சிந்திக்கவேண்டியதும் ஆகும்.

தியாகத்தினால் வெற்றி பெற்று ஆட்சி புரிய வந்துள்ளதாகக் கூறும் நமது மதிப்பிற்குரிய அரசாங்கம், ஏழைத் தமிழாசிரியர்களை — தாய்மொழியாசிரியர்களை, தான் எண்ணியபடி எல்லாம் ஆட்டிவைக்கத் துணிந்திருக்கிறது. பகடை நம்மிடமே உள்ளது, ஆடும் திறமையும் அதிகமாக இருக்கிறது என்று கண்டபடி எல்லாம் காயை நகத்தும் நல்லசாமிச் செட்டியார் போல, நமது மதிப்பிற்குரிய கல்வி இலாகா வேலை செய்து வருகிறது. 15—3—48-ல் 1—1—48-முதல் ஜி. ஓ. நெ. 526-ன்படி ஆசிரியர்களுக்கு ஆரம்பச் சம்பளம் ரூ. 60. கொடுக்கவேண்டும் என்று தீர்மானித்தது. தமிழுடன் ஆங்கிலம் கற்றவாக்கு "எல். டி." சம்பளம் என்றும் அதே பிரிவு அறிவித்தது. ஆனால் இரண்டொரு மாதங்களில் "நல்ல

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

---

தைபிடம் கொஞ்சுவதையே அதிகம் விரும்பினார். குழந்தை தன்னருகிலிருக்கும் போது தூங்கக்கூட மாட்டார்" என்று கூறியிருக்கிறாள். தன் அருமைக் குழந்தையின் கொச்சை மொழிகளைக் கேட்டு ஆனந்திப்பதை விட்டுப் பிரிந்திருக்க யாருக்குத்தான் மனம் வரும்? குழந்தையின் அருகிலேயே இருக்க வேண்டுமென்று விரும்பிய மாக்ஸ்வினி எந்தக்காலத்திலும் அவளைச் சந்திக்க முடியாதபடி பிரிந்துவிடத் துணிந்தார் என்றால் அவரது தியாகத்தை என்னென்று கூறுவது? உலகத்திலே மாக்ஸ்வினியைப் போல் ஒரு சிலர்தான் தியாகச் சிந்தனையும் வீர நெஞ்சமும் உடையவர்களாக இருக்க முடியும்?

"மு. இராஜமாணிக்கம்"

குடி அரசு

8—1—49 சனிக்கிழமை.

# விரைவில் உருவாக்குங்கள் !

நமது சென்னை சர்க்காரும், சில சமயங்களில் அறிந்தோ, அறியாமலோ ஒரு சில பயனுள்ள காரியங்களைச் செய்யப்போகின்றோம் என்று சொல்லி வைக்கிறார்கள். இதைக் கேட்கும் போது, நாம் அவர்களை அவசியம் பாராட்டத்தான் வேண்டியிருக்கிறது. ஏன்? அப்படியே நிறைவேற்றிவைத்து விடுவார்கள் என்கிற உறுதியினாலா? என்றால், நம்மைப் பொறுத்தவரை முழு மனதுடன் நம்புவதற்கில்லை யென்றாலும், ஏதோ இந்த அளவாவது "செய்யப்போகிறோம்" "செய்வதாகத் திட்டமிருக்கிறது" "ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம்" என்பதைப் பத்திரிகைகளில் பார்க்கும்போது இப்படி வாயினாலாவது சொல்லுகிறார்களே என்பதை எண்ணித்தான் பாராட்டுகிறோம்.

"இந்து மதக் கடவுளர்களின் வேஷங்களைப் போட்டுக்கொண்டு சினிமாப் படங்களில் நடிகர்கள் நடிப்பதென்பதைத் தடைவிதித்து ஒரு திட்டம் தயாரிக்க ஆலோசித்துக் கொண்டிருக்கிறது சென்னை சர்க்கார்" என்கிற செய்தியை 2-வாரத்துக்கு முன்னால் படித்தபோது நாம் பெருமகிழ்ச்சியடைந்தோம். இதனை வரவேற்றுப் பாராட்டி, தஞ்சையில் கூடிய மத்திய திராவிடக் கழகக் காரியக் கமிட்டியும் "நல்ல செயல்களை எந்த இடத்தில் கண்டாலும் நாங்கள் பாராட்டத் தயங்கமாட்டோம்" என்பதுபோலத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நாட்டு மக்கள், இவ்வுலக வாழ்வில் கவலையற்றவர்களாய், சொல்லப் போனால் வாழ்விலேயே வெறுப்புற்றவர்களாய் நடித்துக்கொண்டு, எதற்கெடுத்தாலும் வெட்டி வேதாந்தம் பேசும் சாமர்த்தியசாலிகளாய், கையாலாகாத நடைப்பிணங்களாய்ப் பெரும்பாலோர் இருக்கிறார்கள் என்றால், அதற்குக்காரணம் இந்த நாட்டில் பரப்பப்பட்டிருக்கும் அர்த்தமற்ற இந்துமதமும், அதை யொட்டி உற்பத்தி செய்யப்பட்டிருக்கும் ஆபாசக் கடவுளர்களும், அவர்கள் வண்டவாளத்தைவெளிப்படுத்தும் புராண இதிகாசங்களுமே. வாழ்வில் பற்றுடையவர்களாய், செயலில் திறனுடையவர்களாய், எண்ணத்தில் எழுச்சிகொண்டு இந்த நாட்டவரும் மற்ற நாட்டவரைப்போல் முன்னேற்றத்துறைகளில், விஞ்ஞானப் பாதையில் நடந்து செல்லவேண்டுமானால், புராண இதிகாசங்கள் பொசுக்கப்பட்டாக வேண்டும். ஆபாசக்கடவுளர்கள் அழித்தொழிக்கப்பட வேண்டும். இந்துமதம் இறந்தொழியவேண்டும். இவை இறந்தொழிந்து மறையாதவரை—மறைக்கப்படாதவரை எந்த நிர்மாணத் திட்டங்களாலும், எவ்வளவு பெரிய ஆக்க வேலைகளாலும், எந்தமாதிரியான உபதேசங்களாலும் முன்னேற்றம் உண்டாகிவிடும் என்பது முயற்கொம்பே. இந்த உண்மையை, வரும்பொருள் உணரும் வன்மையுடையோர் எவரும் உணரவே செய்கிறார்கள் என்றாலும், அவர்களின் "இரட்டை வாழ்வு" அதை வெளிப்படுத்தும் வலிமையைக்கொடுக்கவில்லை. மிகப்பலர் உணரவே மறுக்கின்றார்கள்.

இந்த நிலையில் நம் சென்னை சர்க்கார் ஆலோசனையிலிருக்கும் இந்தத் திட்டம், மக்கள் வாழ்வில் நஞ்சைக்கலக்கும் மதத்தையும், மனதை உருக்குலைக்கும் மாயா விநோதக் கடவுளர்களையும் மக்கள் மறந்து விட்டு, வாழ்வில் பிடிப்புடையவர்களாய், மனவுறுதியுடையவர்களாய், உண்மையான பரிபூரண விடுதலையோடு உயர் வாழ்வு வாழவேண்டும் என்கிற அடிப்படையில் இல்லை. படவுலகில் பரமாத்துமாக்களின் சஞ்சாரம் மிக மிக அதிகமாகி, அதனால் மக்களின் பக்தியுணர்ச்சி பாதிக்கப்பட்டு விட்டதாம், நாஸ்தீக உணர்வு நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கிறதாம். ஆகவே இந்த நிலைமையை மாற்ற, பக்தியுணர்வு சுடர் விட்டு வீச, படக்காட்சிகளில் பரமசிவன் வகையறாக்களை, வேஷம் போட்டுவேறு எவரும் நடிக்கக்கூடாது என்று விளக்கம் கூறுகிறது. இதற்கு ஆதாரமாக மற்ற மதங்களைத் துணைக்கழைத்திருக்கிறது சர்க்கார். கிருஸ்துவ மதத்தைச்சேர்ந்த ஏசுவையும், மகமதிய மதத்தைச் சேர்ந்த மகமதுவையும், பௌத்த மதத்தைச் சேர்ந்த புத்தரையும் எப்படி படக்காட்சிகளில் காண்பிக்கும் பழக்கமில்லையோ, அப்படியே இந்துமத விஷயத்திலும் ஏன் அனுசரிக்கக்கூடாது என்று மத வாதிகளை நோக்கிக்கேட்கின்றனர்.

கடவுளைக் காப்பாற்றப் போகிறோம் என்கிற இந்தக் கடைகெட்ட போக்கு எப்படியிருந்தாலும், கடவுளர் வேஷங்களைப் போட்டு நடித்து அவற்றைத் திரையிடக்கூடாது என்று தடைப்படுத்தப்படுமேயானால், ஓரளவாவது மக்களின் அழிவுப்பாதை மூடப்படுகிறது என்கிற காரியத்தினாலேயே நாம் சர்க்காரின் இந்த ஆலோசனையை வரவேற்கிறோம்.

மேலைநாட்டு விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் எல்லாம், பூஜைக்குரியதாய், புனிதமென மதிக்கத்தக்க வகையில் இந்நாட்டில் இன்றுவரை கைக்கொள்ளப்பட்டு வருகிறது. அதாவது விஞ்ஞான விளைவுகள் எல்லாம் அஞ்ஞானக் கொட்டடியில் போட்டு அடைக்கப்படுகிறது என்பதற்குச் சரியான எடுத்துக்காட்டு சினிமா. ஏன்?

மனிதனின் மதி நுட்பத்தால் விளைந்தது சினிமா. மகேஸ்வரனின் திருவருளோ மகாத்மாக்களின் அற்புதமோ இதைக்கண்டு பிடிக்கவில்லை. ஆனால் மதியால் விளைந்த அது, மற்ற நாடுகளில் மதியை வளர்க்க, வலுப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது. இங்கோ மதியை அழிக்க, மதியில் மடமையை நட்டு வைக்க அதுவே கருவியாகக் கையாளப்படுகிறது. அதிலு

யம்தான். ஆனால் உண்மை.

இதனை, இதுபோன்ற வேறு பல விஞ்ஞான விளைவுகளை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்தது இந்நாட்டுப் பார்ப்பனீயம். இன்று மட்டுமல்ல, இந்த நாட்டில் எந்த நாளில் ஆரிய இனம் அடி எடுத்து வைத்ததோ, அந்த நாளிலிருந்தே கலையைக் கொலைக் கருவியாகக் கைக்கொண்டு விட்டது. அதனால்தான் பள்ளிக்கூடமே பார்த்தறியாத பாமரன் கூட, வள்ளியை மணக்க மாறுவேஷம் பல போட்ட சுப்பிரமணியனையும், ஆடைகளை எடுத்து வைத்துக் கொண்டு அம்மணமாய் நின்று கும்பிடுங்கள் என்று கோபியரை நோக்கிக் கூறிய கோபால கிருஷ்ணனையும் அறிந்திருக்கிறான். அந்த அளவுக்கு, இந்த நாட்டில் எந்தெந்தக் கலைகளுண்டோ, அந்தக் கலைகளின் அஸ்திவாரமெல்லாம் இந்தக் கடவுள்களை வைத்தே மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது.

மேலும், மற்ற பல கலைகளைக் காட்டிலும் படக்கலைதான் இன்று பார்ப்பனீயத்தின் நச்சுக் கருத்துக்களுக்கு ஊற்றிடமாகவும், பார்ப்பனர்களின் வாழ்வுக்கு பாதைகள் போட்டுத் தருவதாகவும் இருக்கிறது என்பதை எண்ணும்போது, சர்க்காரின் இந்தத் திட்டம் உருவாகுமா? அல்லது கருவிலேயே கருகிப் போய்விடுமா? என்றே நாம் சந்தேகிக்கிறோம்.

இப்போதே பல பார்ப்பனர்கள் சத்தம் போடத் தொடங்கி விட்டார்கள். கலைக்கு ஆபத்து! கடவுள்களை விட்டு விட்டால் கலை எப்படி உயிர் வாழுப்? என்று கதறுகிறார்கள். போகப் போக இந்தக் கதறல் எப்படி எப்படிப் போகுமோ, சர்க்காரின் கருவிலிருக்கும் திட்டம் சிதையாதபடி பூரண உருவோடு பிரசவமாகுமோ? என்று சந்தேகப்படவேண்டிய நிலையிலிருந்தாலும், இதனை விரைவிலேயே சர்க்கார் சட்டமாகக் கொண்டு வரவேண்டுமென்பது நம் ஆவல்.

பார்ப்பனர்களின் பாய்ச்சலினால் இன்றைய மந்திரிசபையின் பல திட்டங்கள் கைவிடப்பட்டு விட்டன என்பதை நாடறியும். இதுவும் அந்தப்பட்டியலில்தான் இடம் பெறுமா? அல்லது செயலுக்கு வருமா? என்பதை நாடு ஆவலுடன் எதிர்பார்க்கிறது.

இந்தத் திட்டம், ஒரு பிற்போக்கான கருத்தை அடிப்படையாகக் கொண்டு கொண்டுவரப்படுகிறதென்றாலும், இதை விரைவில் உருவாக்குங்கள் என்பதே நாம் சர்க்காருக்குக்கூறும் ஆலோசனை. இன்றேல், எக்காரணத்திலாவது இது தடைப் படுத்தப்பட்டு, வெளிப்படுத்தப்பட்ட திட்டம் விகாரப்படுத்தப்பட்டு விடுமானால், சர்க்காரின் அறிவிப்பால் உண்டான மகிழ்ச்சிக்குப், மலமுருட்டும் வண்டு மண்மேல் எழுதும் எழுத்தைக் கண்டு மகிழும் மகிழ்ச்சிக்கும் வித்தியாசமென்ன? என்றுதான் எவராலும் கேட்கப்படும்.

# தற்கொலையல்ல படுகொலையே!

★

அறிவு நிரம்பாக்குழந்தைஒன்று மாடியில் விளையாடிக்கொண்டிருக்கிறது. கையில் இரண்டு தங்கக் காப்புகள். திருடன் ஒருவன் முகமூடியுடன் மாடியில் ஏறிக் குழந்தையை அணுகிக் கட்டைக் குரலில் மிரட்டுகிறான். "இந்தா பார்! நான்தான் பூச்சாண்டி! உங் கையிலே இருக்கிற இரண்டுகாப்புகளையும் கழக்கிக் கொடுத்துவிடு. இல்லாட்டி......

குழந்தைக்கு பகீரென்கிறது. பூச்சாண்டி, பூச்சாண்டி என்று பயங்காட்டப்பட்டு மிரண்டு போயிருந்த குழந்தை, அவனைமுகமூடியணிந்த ஓர் மனிதன் என்பதை நம்ப மறுக்கிறது. பூச்சாண்டி பயம் அதன் தொண்டையை அடைக்கிறது காப்பைக் கழற்றிக் கொடுத்து விட்டு ஆபத்திலிருந்து மீளப்பார்க்கிறது. காப்பையோ கழற்றமுடியவில்லை. பூச்சாண்டி நெருங்குகிறான். குழந்தை பின்னால் நகர்ந்து இவனை விட்டுத் தப்பித்தால் போதுமென்று மாடியிலிருந்து கீழே குதித்து விடுகிறது. மண்டை சுக்குநூறாகிறது.

திருடன் அகப்பட்டுக் கொள்கிறான். பிடித்துக் கொண்ட அக்கம் பக்கத்தினர் "டே, கொலைகாரப் பயலே..." என்று நையப்புடைக்கிறார்கள்.

பாவம், அவனா கொலை செய்தான், குழந்தை தானாகவேவிழுந்துதானே தற்கொலை செய்து கொண்டது என்று யாராலும் அந்தக் கூட்டத்திலிருந்து கத்தினால், அந்தப் பேர்வழிக்கு மூளைக் குழப்பம் என்று தானே முடிவு செய்வர்!

* *

சோதிடன் ஒருவன் கிராமத்துத் தெரு வழியே போகிறான். அவள் பார்க்கிறாள். நம்மைப் பிடித்திருக்கும் துன்பம் என்று நீங்கும் என ஏங்கிய நிலையில், அவன் 'சோதிடம் பார்க்கலையோ' என்று கூறுவது காதில் விழுகிறது. 'ஆகா, இதோ வந்துவிட்டான் நம் தலையெழுத்துப் பண்டிதன். நம் தொல்லைகளின் எல்லையை உரைத்து விடுவான்! அதற்குப் பின் சுகம்வரும், அதுவரை பொறுப்போம்' என்றுஎதிர்காலத்தைப்பற்றி ஏங்கிய பேதை நம்புகிறாள். பாவம், கிராமத்துப் பெண் தானே!

நகரத்திலே விஞ்ஞான மளித்த விசித்திர வசதிகளை நித்தம் அனுபவிக்கும் கலாசாலைப்பட்டதாரிகள் கூட சோதிடம், பஞ்சாங்கம், விதி, தலையெழுத்து இவற்றை நம்பி வாழ்ந்துவரும் கேடு கெட்ட நிலையுள்ள இந்த நாட்டில்கிராமப்புற மக்களது குருட்டு நம்பிக்கைக்கு சொல்லவா வேண்டும்?

கட்டைப் பிரித்துக் கதையை அளக்கிறான் சோதிடன். 'தற்போது இந்தப் பேருடையோருக்கு ஏழாமிடத்திலே சனியுள்ளதால், இன்றைக்கு சரியாக இருபத்திமூன்று நாளைக்குள் ஒரு பெரிய கண்டம் இருக்கிறது. குடும்பத்திற்கே பெருங்கேடும் சூழலாம்'

எதிரேயுள்ள மங்கையின் முகம் சுட்ட பனங்காயைப் போல் சுருங்குகிறது. பாவம்! அவள் கேட்டது தலையிலுள்ள சுமை இறங்

கும் நன்னாளை. விழுந்தது அதற்குள் பேரிடி. "என்னாங்க சோசியரே! நல்லாப்பாருங்க, அப்பமுன்னா இதுக்குப் பரிகாரம் ஒண்ணுமில்லீங்களா" வருத்தம் தவழ, நடுங்கிய குரலில், ஏங்கிய முகத்துடன் கேட்கிறாள், சோதிடனின் பதில் என்னவாயிருக்கு என்ற அச்சத்துடன். அவன் முகத்தைச் சுளிக்கிறான். மங்கை மேலும் தொடர்கிறாள். "எதுக்கும் கொழந்தைகள் கையையையும் பாருங்க" என்கிறாள்.

சோதிடன் தான் கைகண்டவனாச்சே! இதுவா பிரமாதம் அவனுக்கு. குழந்தைகள் கைகளைப் பார்த்தான், உதட்டைப் பிதுக்கினான், நெற்றியைச் சுருக்கினான். "ஊஹும். அதைவிட நன்றாகச் சொல்லுது, குழந்தைகள் கை, கருப்பண்ணனுக்கு நான்கு வயதிலேயும் சென்னிமலைக்கு இரண்டு வயதிலேயும் கேடு நிச்சயம் என்று சொல்லுதுகை" என்கிறான். "பரிகாரம் கேட்கிறாயா, மூணு நாளைக்கு ஒரு வேர் மந்திரிச்சுக்கட்டிக்கோணும். காளி கோயிலுக்கு நாப்பத்தெட்டு நாள் விளக்குப் போடணும், போட்டா கண்டம் விலகும்" என்று வரும்படிக்குஅடிபோட்டுக் கொண்டான் அந்தமோசக்காரன்.

சோதிடம் பார்த்துக்கொண்ட நங்கைக்கு ஓரே ஆனந்தம். இவ்வளவு குறைந்த செலவில், இவ்வளவு பெரிய கண்டத்தைப் போக்கிவிடுவதென்றால் எவ்வளவு மகிழ்ச்சி அடையவேண்டும்! ஆகட்டும் சோசியரே பண்ணைக்காரர் வந்ததும் கேட்டு வாங்கி வக்கிறேன் பணம். நாளைக்கு வாங்க" என்கிறாள்.

பண்ணைக்காரரிடம் சொல்லிச் சாந்தி கழிக்கப்பணம்கேட்கிறாள். "போடி போ, இந்த மாதிரி எத்தனையோ சோசியக்காரனைப் பார்த்தாச்சு. ஊரை ஏமாத்திற வனுங்க. அப்படியும் எங்கிட்ட பணமும் இல்லை" என்று ஓரே யடியாய் அடிக்கிறார் வீட்டுக்காரர்.

அவளுக்கோ வேறு எதிலும் கவனம் செல்லவில்லை. கண்டம், கேடுகாலம் அவளைப் பயமுறுத்திக்கொண்டே வந்தன. அவளிடமோ பரிகாரம் செய்யப் பணமில்லை. வேறு வழி! பயம் விரட்டியது. எழுந்தாள், புடவையை வரிந்து கட்டினாள். தன் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டாள். கிணற்றங்கரை சென்றாள். குழந்தைகளை முத்தமிட்டாள். தூக்கி வீசினாள் தண்ணீரில். தானும் வீழ்ந்தாள்.

* *

ஏதாவதொரு பெயர்பெற்ற ஒரு நாவலிலிருந்து எடுக்கப்பட்ட பகுதியல்ல மேலே காண்பது. எனது சொந்தக்கற்பனையுமல்ல. உண்மை நிகழ்ச்சி. உரையாடல் வேண்டுமானால் இப்படி நடந்திருக்கலாமென்பது என் யூகம். 'சோதிடன் ஒருவன் சீக்கிரத்தில் கேடுகாலம் சூழப்போகிறதென்றும் அதற்குச் சாந்தி கழித்தாலொழிய மார்க்கமில்லையென்றும் சொல்ல, புளியம்பட்டி அப்பச்சி அம்மாள், சாந்திகழிக்க தன் கணவன் நஞ்சுண்டக் கவுண்டனிடம் பணம் கேட்டதாயும், அவர் கொடுக்க இயலாமல் போகவே, வரப்போகும் கேடு என்ன செய்யுமோ என்று அஞ்சிய அம்மாது, குழந்தைகளுடன் தானும் கிணற்றில் வீழ்ந்து மாண்டாள் என்பது 3—1—49ந் தேதிய தினசரிகளில் காணப்படும் செய்தி.

இந்தத்தற்கொலை படுகொலையானது எப்படி என்று பார்ப்போம். அறிவு நிரம்பா குழந்தை—பகுத்தறிவை உபயோகிக்கும் பக்குவம் பெறாத அப்பச்சி அம்மாள்; அங்கே முகமூடியுடன் திருடன்; இங்கே சோதிட ஓலைக் கட்டுடன் தலையெழுத்துப் பண்டிதன்; காப்பைக் கொடுக்காவிட்டால் பூச்சாண்டி, பிடித்துக்கொள்வேன் என்கிறான் அவன், இவனோ எனக்கு ஏதாகிலும் கொடுத்து சாந்தி கழித்துக் கொள்ளாவிடில் பெரியதொரு கேடுகாலம் பிடித்துக் கொள்ளும் என்கிறான்.

* *

கிணற்றிலேவீழ்ந்து மாண்டாள்.

அவளை வீழச் செய்தது (வீழ்த்தியது) எது?

பயம்.

என்ன பயம்?

கேடுகாலம் சூழப்போகிறதே அதன் பலன் என்ன வாகுமோ என்ற அச்சம்.

அந்த அச்சத்தை ஊட்டியது யார்?

சோதிடம், சோதிடன்.

ஆகவே கிணற்றில் அவள் தானாகவே விழவில்லை. சோதிடம் அவளைத் தள்ளிக்கொண்டு போய்த்தண்ணீரில் எறிந்தது. அவளை மட்டுமல்ல, அவளது இளம் குழவிகளையும் கூடத் தான். ஒருயிரல்ல மூன்று உயிர்ப் பலிகள். ஆகவேதான் இது படுகொலை என்று பகருகிறேன்.

அந்தக் கிரிமினல் குற்றவாளி சோதிடன் அடுத்த நாள் தன் வரும்படியை வகைப்படுத்த அப்புச்சி அம்மாள் வீட்டை அடைந்திருப்பான். ஓரே அழுகுரலாயிருந்திருக்கும். சாந்தி கழிக்க வேண்டிய உருவம் நிரந்தரச் சாந்தி பெற்று சஞ்சலம் தவிர்ந்து விட்டதென்பதை அறிந்திருப்பான். ஆனால் இந்தக் கிரிமினல் குற்றத்துக்கு போலீசார் தன்னைப் பிடித்துத் தண்டிப்பர் என்று அஞ்சுவானா! கிஞ்சிற்றும் அஞ்சான். கையிலேதான் கேடயம்-சோதிட ஏடு இருக்கிறதே! இந்த சர்க்காரிலே, தற்சமயமுள்ள நாட்டு நடப்பிலே எப்படிப்பட்ட குற்றத்தைச் செய்தாலும் கையிலே பஞ்சாங்கம், சோதிட ஏடு அல்லது துளசிமணி மாலை, கதராடை ஏதாகிலும் ஒன்றிருந்தால் போதுமே, சட்டம் எட்டி நிற்குமே!

"பார்த்தீர்களா, என் சோதிட சாஸ்திர மகிமையை! சாஸ்திரம் பொய்க்குமோ? இதோ பாரீர், நான் சொன்னபடி கேடுகாலம் சூழ்ந்துவிட்டதா இல்லையா" என்று இதையே நற்சாட்சிப்பத்திரமாகக் கொண்டு "கண்கண்ட சோதிடர், பொய்யாமொழி ஆரூடசாலை" என்று போர்டு மாட்டிச் சோதிடன் பிழைப்பைப் பெருக்கிக் கொண்டாலும், அதைப்பற்றியும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பகுத்தறிவுக்குத்தான் இந்த சர்க்காரால் தடை விதிக்கப்படுகிறதே யொழிய பித்தலாட்டத்திற்கல்ல. பகுத்தறிவுக்காவியங்களையும், நாடகங்களையும் மக்கள் மன்றத்திலிருந்து அப்புறப்படுத்தும் அரசினர், பகுத்தறிவு பரவாததால் சோதிடத்தில் மூடநம்பிக்கை கொண்டு பரிதாப முடிவெய்திய அப்பச்சி அம்மாள், குழந்தைகள் ஆகியோர்களைப் படுகொலை செய்த சோதிடப் பித்தலாட்டத்தைத் தடை செய்வாரா? எங்கே செய்யப்போகிறார்கள்? சின்னாட்களுக்குமுன் தான் சென்னையில் ஒரு சோதிட நிபுணரின்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

சாமி'' வேலையைக் கல்வி இலாகா கையாளத் தொடங்கி இருக்கிறது. 7—9—48-ல் திடீரென்று தாய்மொழி ஆசிரியர்களுக்கு ஜி. ஓ. நெ 2214-ன் படி சம்பளம் ரூ. 40. என்று அறிவித்தது. இந்த அறிவிப்பு, பலருக்குத் திகைப்பை ஏற்படுத்திவிட்டதென்றாலும் யாரும் ஏதுவும் அப்போது செய்ய முடியாத நிலையில் இருந்தனர். காரணம், அவ்வுத்திரவிலுள்ள தெளிவில்லாத நிலையே. ஆனால் காருண்ய மிக்கதராட்சி 25-11-48ல் மற்றொரு அறிவிப்பு விட்டுத் தெளிவு படுத்தி, நாற்பது ரூபாய் சம்பளத்தை உறுதிப்படுத்தி விட்டது.

திடீரென்று இப்படிமாற்றுவதற்குக் காரணம் என்ன? வாழ்க்கைத் தரமும், பணத்தின் மதிப்பும் உயர்ந்துவிட்டதா, இரண்டொரு மாதங்களில்! இல்லையென்றால் முன்போட்ட உத்திரவைத் திடீரென்று மாற்றவேண்டிய அவசியம் என்ன? போருக்கு முற்காலத்திய வீதப்படி ரூ. 30 கூட ஆகாத இப்போதைய 82. ரூ. ஊதியம் [60—22] கல்வி இலாகாவிற்குத் திடீரென்று அதிகமாகத் தெரிந்ததேன்? கூட்டவும், குறைக்கவும் செய்ய இடையிலே காலம் எவ்வளவு கடந்திருக்கிறது? காலம் மாறவில்லை, நிலைமை மாறவில்லை, ஆசிரியத்தொழிலின் அடிப்படை மாறவில்லை. ஆனால் போட்ட சம்பளம் நாலைந்து மாதத்தில் நத்தைபோலச் சுருங்கி விட்டது! மாறி விட்டது! இதற்கு என்ன காரணம்? மதியூக மந்திரி அவர்களின் மனமாற்றம் தவிர! ஏமாற்றம் ஏழை ஆசிரியர்களுக்கு! ஆனால் "பகடை" உருட்டும் போக்கை, நம் மனக்கண்முன் இச்செயல் தோற்றுவித்தால் அதற்கு நாமென் செய்வது! உண்மை என்று உணர மறுப்பவர்க்கு உரத்த குரலிலே கோபம் வரும். அதைக்கண்டு அஞ்ச நாம் ஒன்றும் உலுத்தர்கள் அல்லவே!

ஓடுகிறவரை ஓடட்டும். ஆனால் ஓடுகிற காலிலே ஒரு சிறு கல் தேக்கினாலும், என்ன ஆகும் என்பதை மறவாமலே ஓடட்டும். ஆனால் நினைத்தபடியெல்லாம் உருட்ட நாடு சதுரங்க மேடை அல்ல. உண்மை உணராதவரை—அல்லது—மறைத்து வைக்கப்படும் வரை காய்களைப் போல் இருக்கலாம் நாட்டு மக்கள். உண்மையை உணர்ந்து விட்டால் காய்கள் அல்ல, கனற்பிழம்புகளாவார்கள் மக்கள்! பிறகு, தொட்ட இடமெல்லாம் சுடும், அந்நாளும் விரைவில் வரும்...!

முன்னைய நாளில் தமிழாசிரியர்களின் பொருளாதார நிலை யாவரும் அறிந்ததே. மனிதத்தன்மை படைத்த எவரும் இதை அறிவர். கல்வி நிலையங்களிலே, தமிழாசிரியர்கள் "தாழ்த்தப்பட்டவர்களைப்" போலக்காட்சியளித்தனர். மக்களின் முன்னிலையிலே கேலிக் குறிப்புக்கோர் எடுத்துக் காட்டாகவும்; நாடகம், படக்காட்சி முதலியவற்றிலும், கதை, கட்டுரை, கவிதைகளிலும் மக்களைச் சிரிக்கவைக்க நகைச்சுவையூட்டும் நல்ல கருவிகளாகவும் பயன்பட்டுவந்தார்கள். ஒட்டைக் குடையும், கிழிந்த ஆடையும், தளர்ந்த நடையும், பணிந்த பேச்சும் அவர்களின் "தாழ்வை" விளம்பரப்படுத்தும் "தகுதி"களாக இருந்தன. எனவே அவர்கள் வாழ்வை வெறுத்து வாடி, வதங்கினார்கள். இவ்வாறு முன்னைய நிலை இருந்ததற்குக்காரணம் என்ன?

எளிதாக இதற்குப் பதில் கிடைத்துவிடும், மொழியைப் போற்றாது, இனத்தை எண்ணாது, உரிமைஇழந்து அந்நியன் செய்த இன்னல்களுக்கெல்லாம் ஆளாகி வந்த காலம் அது, எனவே அப்படி இருந்தது என்று. ஆனால் கொடுமை விலங்குகள் குகைகளுக்கு ஓட, கொஞ்சும் பறவைகள் வானத்திற் பாட, நாட்டு மக்களின் உள்ளமெல்லாம் நலத்தைநாட, சுதந்தர சூரியன் உதயமாகி உயர, உயரப் போய்க்கொண்டிருக்கும் இந்நாளில், தமிழாசிரியர்களின் நிலை உயர்கிறதா என்றால் இல்லை. மேலும், மேலும் தாழ்வடைகிறது, கேட்பாரற்ற அனாதையின் நிலைபோல. இதை மாற்ற வழி இல்லையா?

"ஒரு மனிதனுடைய சமூகப்,பொருளாதாரத் தகுதிதான் அவனுடைய கருத்துக்களைத் தீர்மானிக்கிறது" என்ற மார்க்ஸ் தத்துவத்திற்கு ஏற்ப, தமிழாசிரியர்களின் முன்னைய நிலை இருந்தது. முன்னைய ஆசிரியர்கள் தங்களின் வருமானக்குறைவினால் வறுமை நோய் நீங்காமல் வாட்டமுற்று, நாட்டில் கேலிச் சித்திரமாய், வீட்டில் நடைப்பிணமாய், மாணவ, மாணவிகளிடம் பொழுதுபோக்கப் பயன்படும் பொம்மையாய் பைத்தியம் போல உலவி வந்தார்கள். குடும்பத் தொந்தரவு, கடன் தொல்லை, ஏழ்மை வாழ்வு, இழிவுச் சூழ்நிலை இவற்றினிடையே அவர்களுடைய அறிவு மங்கி, மறைந்து மேகத்தினூடே மறைந்த தேய்மதியாக இருந்தது!

ஆனால் இன்றைய இளைஞர்களின் வாழ்விலும் அதே நிலையை நீடிக்க விட்டு, அறிவிலிகளாக்கி வாழ்வதா. கத்திலேயே, நாம் பேசும் மொழியை பிழையறக் கற்றுத் தேர்ந்து பிறர்க்குக் கற்றுக் கொடுக்கின்ற ஒரே குற்றத்திற்காக ஊதியக் குறைவால் அவர் தம் ஆவியைப் போக்கும் அரசாங்க அலுவலச்

## "ஈரோடு வாசி"

(●)

இது தோழர் பி. சண்முகவேலாயுதன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு ஈரோட்டிலிருந்து வெளிவரும் வார வெளியீடு. ஈரோடு தாலுகாவைப்பற்றிய செய்திகள் நிரம்பி, மக்களின் குறைகளையும் முறைகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் இது, மக்களிடையே பெருஞ் செல்வாக்கைப் பெற்றிருக்கவேண்டும் என்பதில் அய்யமில்லை. இன்றேல் ஆரம்பித்த 10-வது மாதத்திலேயே 4-பக்கங்களாயிருந்து 8-பக்கங்களாய் எப்படி விரிவடைந்திருக்க முடியும்?

கள்ள உள்ளத்தினர் ஒவ்வொருவரும், தமது கள்ளச் செயல்கள் வெளிவந்துவிடுமோ என எதிர்பார்த்து, எதிர்பார்த்துக் கருத்தழியும் விதத்திலும், ஓரளவாவது நேர்மையைக் கைக்கொள்ளவேண்டும் என்று தூண்டும் விதத்திலும், இதனுடைய தலையங்கங்களும் மற்றகுறிப்புகளும் அமைந்திருப்பது போற்றத்தக்கது.

அரசியல்கட்சி எதனுடைய அடிச்சுவட்டையும் பின்பற்றாமல், சுருங்கிய அளவில் தன் இலட்சியத்திற்கு எல்லைவகுத்து, மக்களின் குறைபாடு மறைந்தொழியப் பாடுபடும் இந்த "ஈரோடு வாசியை" போல ஒவ்வொரு தாலூகாவிலும் ஒவ்வொரு பத்திரிகை தோன்றுமானால் அவற்றால் நாட்டுமக்கள் பெரும் பயனடைவார்கள் என்பது உறுதி.

நீடித்து நின்று மக்களுக்குப் பெரும் பயன் நல்குமாக. [தனிப் பிரதி 1 அணா. ஆண்டுக்கு ரூ. 4.]

(?) பிறந்த நாள் விழாவில் மந்திரியொருவரே கலந்து கொண்டு சோதிடசாஸ்திர மகிமை (!) பற்றி பிரமாதமாகப் பேசியிருக்கிறாரே!

ஏ சோதிட சாஸ்திரமே, ஏ பழைய பஞ்சாங்கமே! இன்னும் எத்தனை அப்பாவிகளின் உயிரைப் பலி வாங்கப்போகிறாயோ?

"இரா. கோ. கிருஷ்ணன்"

## மனுநீதி, பஞ்சாங்கம் வகையறாவைக் கொளுத்துமின்!

காஞ்சீபுரம் ஜன. 5.

பெரிய காஞ்சீபுரம் புதுப்பாளையம் தெருவிலுள்ள தமிழர் [சூத்ரர்] சங்கத்தில் போய் தீயில் (13-1-49) பஞ்சாங்கம், மனுநீதி கொளுத்தப்படும்.

ஒவ்வொரு தமிழர் வீட்டிலும், இப்படிப் பாவனையாகவாவது இவற்றைக்கொளுத்துங்கள். ஏன் என்றால் பஞ்சாங்கம் பார்க்கும் பழக்கம் ஒழியவேண்டும். பஞ்சாங்கம் நம் வீடுகளிலேயே இருக்கக்கூடாது. மனுநீதி நம்மை அடக்கி, ஒடுக்கிப் பார்ப்பனருக்கு அடிமைகளாக வைக்க ஏற்படுத்தப்பட்ட சட்டம். மனுநீதிதான் இந்துலாவிற்கு ஆதாரம். ஆகையால் இந்து லா ஒழியவேண்டும். நம் நன்மைக்காக நாமே புதிய சட்டம் அமைக்கவேண்டும். ஆகையால் மனு நீதியையும் சேர்த்துக் கொளுத்துங்கள், இந்தத் தமிழர் திருநாளுக்கு முதல் நாளிலே!

அன்புள்ள,
ஆ. சி. கோவிந்தராசு
எம். ஏ. பி. எல்.
தமிழர் ஊழியன்.

## திராவிடர் கழகம் திறப்பு விழா

குணியமுத்தூர் ஜன. 2—

கோவைக் கடுத்த குணியமுத்தூரில் இன்று திராவிடர் கழகம் திறந்து வைக்கப்பட்டது.

தோழர்களான எம். சதாசிவம் தலைவராகவும் பொருளாளராகவும், எஸ். மாரியப்பன் துணைத் தலைவராகவும், எம். கண்ணப்பன் செயலாளராகவும், எம். கருப்பணன் உதவிச் செயலாளராகவும், மேலும் 9-பேரை செயற் குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றது.

---

செயலுக்கு அடிபணிந்து வீழ்வதா?

காலம் மாறி, கருத்தும்மாறி, உலகமும் மாறி வருகிறது. நீங்கள் மாற வேண்டாமா! ''சபாபதியாக''வே இருக்கவேண்டுமா. இக்கேள்விகள் ஆசிரியன் மாணவனை நோக்கிக் கேட்கும் கேள்விகள் அல்ல. எத்தனையோ ஏழைத் தமிழாசிரியர்களின் பெருமூச்சின் இடையே தோன்றியவை, பதில்பெற மட்டும் அல்ல, பயன் பெற!

''தமிழண்ணல்''

## அடக்கு முறை எதிர்ப்பு வெற்றிநாள்.

-(●)-

ஈரோடு ஜன 1.

கம்யூனிஸ்ட்டுகளைக் காரணமாகக் காட்டி நேற்றுமுதல் 144 என அறிவிக்கக் கேட்டிருந்த நகரில், இன்று மாலையில் தோழர் பி. சண்முகவேலாயுதன் தலைமையில் ஊர்வலம் என்பதைத் துண்டு விளம்பரங்களும், பெருந்தட்டிகளும் அறிவித்திடவே, இது பெரும் பரபரப்பை யூட்டியது.

''அடக்கு முறை ஆட்சியினர் தடையும் போட்டிருக்கவேண்டும், அப்போது நாம் அதை நம் நியாயமான பிரசார உரிமைக்காக மீறியே யாக வேண்டும்'' என்று எண்ணியும், பேசியும் வந்த இவ்வூர்த் தோழர்கள் இதை ஒரு நல்ல சந்தர்ப்பம் என்றே கருதிக் குறிப்பிட்ட நேரத்திற்காகத் துடி துடிப்போடு காத்திருந்தனர்.

தோழர்களான பி. சண்முக வேலாயுதன், ஈ. வெ. கி. செல்வராசு, எஸ். அப்பாவு, எம். சுப்பையன், ஆர். பெருமாள், கே. ஜக்கிரியா ஆகிய ஆறுபேரும் இன்று ஊர்வலமாகச் செல்வதென முடிவு கட்டப்பட்டிருந்தது.

நிலைமையையறிந்த போலீசார், இம் முயற்சியைக் கைவிட்டுவிட வேண்டுமெனப் பல நியாயங்களை எடுத்துக்கூறிக் கேட்டுக் கொண்டார்கள் என்றாலும், அதற்கு ஒத்துக்கொள்ளாத தோழர்களை, பெரியாரவர்களின் அறிக்கையைக் காட்டிப் பெரிதும் வற்புறுத்திச் சொல்லியதின் மேல், நம் தோழர்கள், ''ஜனங்கள் முன் வந்து தடைப்படுத்துங்கள், நாங்களும் மக்களுக்கு விளக்கிச் சொல்லிப் பின் கலைந்து செல்லுகிறோம்'' என்று மிகுந்த மனவேதனையோடு கூறவேண்டியதாயிற்று.

குறிப்பிட்டிருந்தபடி, மாலை 6-மணிக்கு முன்னாலேயே ஆயிரக் கணக்கான மக்கள் பன்னீர்ச்செல்வம் பார்க்கில் கூடிவிட்டார்கள். 6-மணிக்குத் தலைவர் தோழர் சண்முக வேலாயுதனவர்கள் வந்தவுடன் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் இருவர் வந்து 144-இருப்பதைச் சொல்லி, எல்லோரையும் கலைந்து போகச் சொல்லுங்கள் என்று கூறினார். சிறிது நேர உரையாடலுக்குப் பின் நம் தோழர்கள் ''கலைந்து சென்று கழகக் கட்டிடத்திற்கு வந்து சேருங்கள்! கூட்டம் நடைபெறும்'' என்று பல முனைகளிலும் நின்று அறிவித்திட, அவ்வாறே மாலை 6½-மணிக்குத் தோழர் பி. சண்முக வேலாயுதன் தலைமையில் கூட்டம் தொடங்கியது. புலவர் மாணிக்கம் சொற்பொழிவாற்றினார். பின் குடந்தைத் தோழர்களைப் பாராட்டித் தீர்மானம் நிறைவேறிய பின் செயலாளர் நன்றி கூறக்கூட்டம் இரவு 8½-மணிக்கு இனிதே முடிந்தது.

★


பொன்னி.

''பொங்கல் மலர்''

இன்பம் பெருகும் பொங்கல் நாளில் இனிய கலைவிருந்தாக மலர்கின்றது.

பெரியார் ஈ. வெ. இராமசாமியின் மதமும் கடவுளும் என்ற புத்தம் புதிய ஆராய்ச்சிக் கட்டுரையும்,

அறிஞர் அண்ணாத்துரை எழுதிய, பெரியாரின் இயக்க வெற்றியின் இரகசியம்பற்றிய வெற்றிகண்ட வேந்தர் என்னும் கட்டுரையும்,

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் அழகிய பொங்கற்பாட்டும், மற்றும் பல பேனா மன்னர்களின் உயிரோவியங்களும்,

மலரை அணி செய்கின்றன.

விலை ரூ. 3-12-0. தபாலில் ரூ 4.

:: பொன்னி அலுவலகம், ::

த. பெ. 39, புதுக்கோட்டை.

# அபாய அறிவிப்பு!

★

“மானம் பார்த்தவன் வளர்த்த பருத்தியாலே, உலகில் மானங்காக்க வந்தது வேட்டி சேலை” என்று உள்ளத்தின் உணர்ச்சியை ஒழுங்காகக் காட்டினார் உடுமலை நாராயணக் கவி. ஆனால் மக்களின் மானங்காக்க வேலை செய்து கொண்டிருக்கும் கைத்தறி நெசவுத் தொழிலாளி இன்று மானங்கெட்டு மதிப்புக்கெட்டு மனித உருவங்களாக மண்ணில் உலவிக் கொண்டிருக்கின்றனர் என்ற தாழ்ந்த நிலையைக் கண்டும் வாளாவிருக்கின்றனர் ஆட்சியாளர்களும் அதன் அன்பர்களும். என்று பார்த்தாலும் எங்கு கேட்டாலும் கைத்தறி நெசவுத் தொழிலாளரின் கூக்குரலைப் பிரதிபலிக்கும் கூட்டங்கள் கணக்கற்று நடந்த காலம் ஒன்றிருந்தது. மேடையேறி மக்களின் மனதைக் கவர்ந்து மரியாதையும் மதிப்பும்பெற்ற மணிப்பிரவாகப் பேச்சாளர்கள் மலிந்து கிடந்த காலமும் ஒன்றிருந்தது. சண்டித்தனம் செய்யும் சர்க்காரைச் சரிப்படுத்த சரமாரியான கேள்விகள் கொடுத்து சவால் விடுத்து சந்தோஷ ஆரவாரம் செய்த சன்மார்க்க சீலர்கள் சீறியெழுந்த காலமும் ஒன்றிருந்தது. நெசவுத் தொழிலாளரின் நேயர்கள் நாங்கள்தானென்று, “கணக்கெடுப்போம் கணை விடுப்போம் கைகொடுப்போம்” என்று காரசாரமாகப் பேசி, வீதி வீதியாக வீடு வீடாக விறுவிறுப்போடு சென்று, விட்டுப்போன தறிகளுக்கும் விதிவிலக்கு அளித்து, பணிந்து பல்லிளித்து பரம பக்தர்களாக பாசாங்கு செய்த பணியாட்கள் பலரிருந்த காலமும் ஒன்றிருந்தது. ஆனால் இன்று......அந்தோ! பரிதாபம் மட்டுமல்ல வெட்கக்கேடும் கூட என்றுதான் கூறவேண்டும்.

அன்று புலிகளெனச் சீறிய அந்தப் பொதுநலத் தொண்டர்கள் என்பவர்கள் இன்று புதருக்குள் பதுங்கிக் கொண்டனரா? அல்லது பகவான் திருவடி நிழலைத்தஞ்சமடைந்து விட்டனரா? இல்லவே இல்லை. இருக்கத்தான் செய்கின்றனர் இருப்பு உலக்கைகள் மாதிரி. ஆனால் இன்று அவர்களின் நிலை, அந்தஸ்து வேறு திக்கில் சென்றுவிட்டது. “தொழிலாளரின் துயர்துடைப்போம்” என்று கூறிப்பெற்ற செல்வாக்கை, கூட்டுறவு ஸ்தாபனங்களின் தர்ம கர்த்தாக்களாக வீற்றிருக்கவும், ஆட்சியாளர்களின் அன்பர்களான ஆபீஸர்களின் அடிவருடும் அன்பர்களாக விளங்கவும், அதன் மூலமாகத் தம் தம் சுயநலங்களை ஓரளவுக்குப் பூர்த்தி செய்து கொள்ளவும் முனைந்து விட்டனர். இந்த நிலையில் இன்று நெசவுத் தொழிலாளர்களைப் பற்றி நீதிகேட்டு வாதாட தொண்டர்களோ, தலைவர்களோ இல்லை என்றுதான் கூற வேண்டும். அப்படியே ஒரு சில தோழர்கள் முயற்சித்தாலும் ஆட்சியாளர் ஆவன செய்ய முற்படுவதில்லை. ஆட்சிப்பீடம் ஆட்டங்கொடுத்து விடாமல் இருக்க ஒவ்வொரு மந்திரியும் ஆளுக்குப் பத்து எம். எல். ஏ. க்களை சரிப்படுத்தத்தான் நேரம் சரியாக இருக்கிறதே தவிர; தொழிலாளர்களின் துயர் நீங்க எதுவும் செய்ய யாரும் தயாராக இல்லை என்றுதான் தெரிகிறது.

நேர்மையும் நீதியும் நெஞ்சுரமும் கொண்ட நெசவுத் தொழிலாளியே! என்ன செய்யப் போகின்றாய்! இன்று இஃதோர் அபாய அறிவிப்பு என்பதை அறி! வளம் கெட்டு வாழ்வுகெட்டு வகையற்று நடைப்பிணமாய் எத்தனை நாளைக்கு அலைந்து திரிந்து கொண்டிருக்கப்போகின்றாய்! உனது உள்ள நிலையை எடுத்துக்கூற, கூட்டங்கள் நடாத்துவதுகூட இந்த ஆட்சியில் குற்றமாகக் கருதப்பட்டு ஆங்காங்கே 144-தாண்டவமாடுகிறது. இம்மென்றால் வனவாசம், ஏனென்றால் சிறைவாசம் என்ற நிலையிலே இருக்கிறநீ, மந்திரிகளுக்காவது மகஜர் அனுப்பு! பத்திரிகைகளுக்கு பல தாக்கீதுகள் கொடு! கட்சிபேதமின்றி எல்லாத்தலைவர்களுக்கும் இதுபற்றி எழுது! எம். எல். ஏ. க்களை இடைமறித்து எடுத்துக்கூறு! இது “அபாய அறிவிப்பு” என்றே ஆட்சியாளர்களுக்கு கூறு! இதுபற்றி கைத்தறி நெசவுத் தொழிலில் கண்ணும் கருத்தும் கொண்ட பல தோழர்களையும் கலந்து பேசு! இன்றேல் ஏமாந்துவிடுவாய்! நினைவிருக்கட்டும், “அபாய அறிவிப்பு”

டி. எம். பீர்முகம்மது.

---

[4ம் பக்கத் தொடர்ச்சி]

அதையும் காளி பார்த்துக் கொண்டுதான் இருந்தாள், தனது கோரைப் பற்களிடையே நாத் தொங்க.

அன்று காளியைக் கும்பிட்டு விட்டு வீட்டிற்குச் சென்றது ஓர் குடும்பம். பொன்னிக்கும் வேலனுக்கும் அன்று சாந்தி. நேரம் நெருங்கியது. பொன்னியைக் காணவில்லை. “எங்கே! பொன்னி” என்ற குரல்கள் வீட்டில் எழுந்தன.

இங்கே இருக்கிறாள்பொன்னி, காளி கோவிலின் முன் உள்ள மரத்தில் தொங்கிக்கொண்டு. அவளுக்கு மட்டும் அன்று சாந்தி கிடைத்துவிட்டது. காளி அதையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறாள் சிலை போல். சிலை போல் என்ன கற்சிலை. லேசான கல்லல்ல, கெட்டியான கல். செதுக்குவதற்கேற்ப கெட்டியான கல். காளி ஓர் கோரமான ‘கற்சிலை’தான்.

---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சின்னான்:-[ஓடுகிறான்.]

முதலியார்:-டேய் சின்னான்!!

சின்னான்;-[ஓடி வருகிறான்]

முதலியார்:-விமலா வேண்டாம் பத்மாவைக் கூட்டிக் கொண்டு வாடா...

சின்னான்:-[மறு பக்கம் ஓடுகிறான்]

முதலியார்:-டேய் சின்னான்!!! இங்கே வாடா...போயி...விமலாவையே கூட்டிக்கொண்டு வாடா...

சின்னான்:-[திரும்பிஓடுகிறான்]

முதலியார்:-இல்லேடா—பத்மாவிடம் சொன்னால், அவளே விமலாவிடமும் சொல்லி விடுவாள்...! உம். நீ போயி பத்மாவையேகூட்டிக்கொண்டு வாடா...

சின்னான்:-[மீண்டும் மறுபக்கம் ஓடுகிறான்]

முதலியார்:-டேய்......நில்லு!—பத்மாவும் விமலாவுந்தான் ஒருவருக்கொருவர் சரியாவே பேசிக் கொள்கிறதில்லையே...? ஊ...ங்!

சின்னான்:- [தனக்குத் தானே ஒரு தீர்மானம் போட்டுக்கொண்டு உள்ளே போகிறான்]

முதலியார்:-[திரும்பிப் பார்த்துச் சின்னான் போவதை அறிந்து] அடடடே...யாரையடா கூட்டிக் கொண்டு வரப்போகிறே...? உம். சரி தொலைஞ்சு போய் விட்டான்! யாரைக்கூட்டிக் கொண்டு வரப்போகிறானோ...? ஊம்! யார் வந்தால் என்ன எப்படியும் விவரந் தெரியவேண்டியது தானே...?

சின்னான்:- [பத்மாவை ஒரு பக்கமும், விமலாவை ஒரு பக்கமும் கூட்டிக்கொண்டு போய்

நிறுத்திவிட்டு, முதலியாரிடம் சென்று] எசமான்! இப்ப நீங்க யாரிடம் பேசவேண்டுமோ அவுங்க கிட்டேப் பேசிக்கங்க!

முதலியார்:- அடேச்சின்னான்! உனக்குக்கூட மூளையிருக்குடா!

சின்னான்:- [ஒரு பக்கமாய்ப் போய் நின்று தனக்குத்தானே] எனக்கு மூளை இருக்கிறது, என எசமான் மூளைக்கு இன்னைக்குத்தான் தெரிஞ்சிருக்கு...!

முதலியார்:- என்னடா முணங்குறே...?

பத்மா:- ஏண்டா சின்னான்! எசமான் இங்கே வந்து நிக்கச் சொன்னாரு என்றாயே! ஏன்?

சின்னான்:- ஒன்னுமில்லீங்க!

பத்மா:- என்னடா! ஒன்னுமில்லாததுக்கா இங்கே வந்து நிக்கச் சொன்னாரென்றாய்

முதலியார்:- [சின்னானை நோக்கி] ஒன்னுமில்லையா...?

சின்னான்:- [பத்மாவை நோக்கி] எதுவாச்சும் இருக்குங்க

முதலியார்:- [கோபமாக] என்னடா டேய்! கிண்டலா பண்ணுறே...? [என்றதட்டி அடிக்கப் போகிறார்.]

சின்னான்:- [பயந்து ஓடுகிறான்.]

பத்மா:- ஆமாங்...! இன்னைக்கேன் இவ்வளவு கோபம்? என்னைக்குமே இல்லாத அதிசயமா இருக்கே...?

முதலியார்:- என் மனச் சாட்சிக்கும், எனக்கும் பலத்தசண்டை நடந்தது...

பத்மா:- அதில் யார் செயித்தது?

முதலியார்:- நான் தான் ஒருவாறு செயித்துவிட்டேன்! ஆனால் மனம் நிம்மதியா இல்லையே...

பத்மா:- மனந்தான் தோத்துப் போயிருக்கே அது எப்படி நிம்மதியாக இருக்கும்? சரி. சங்கதியை விளக்கமாகச் சொல்லுங்கள்! உங்கள் மனதுக்கும், உங்களுக்கும் சமாதானம் செய்ய முடிகிறதா என்று பார்க்கிறேன்!

முதலியார்:- வேறே ஒன்றுமில்லை! ஒரு நிரபராதியைக் குற்றவாளி என்று போலீஸில் ஒப்படைத்துவிட்டு, உண்மையானகுற்றவாளியை வெகு கௌரவமாக நடத்திவிட்டு வந்திருக்கிறேன்! அவ்வளவுதான்.

பத்மா:- அவ்வளவுதானா! சரி, இப்போதே போய் அந்த நிரபராதியை விடுதலை செய்யச் சொல்லிவிட்டு, குற்றவாளியைப் பிடித்துச் சிறையில்போட ஏற்பாடு செய்துவிட்டால், போகிறது!

முதலியார்:- ஆமாம்! அப்படித்தான் செய்யவேண்டும். ஆனால், நீ சம்மதிக்கமாட்டாயே...?

பத்மா:- எனக்குச் சம்மதமில்லாமலா இந்த யோசனையைச் சொன்னேன்...?

முதலியார்:- உனக்கு அந்தக் குற்றவாளியாரென்று தெரிந்திருந்தால், நீ அப்படிச்சொல்லி இருக்கமாட்டாய்...

பத்மா:- யாரது...? என்ன 'புதிர்' போடுகிறீர்களா...?

முதலியார்:- [கோபமாக] புதிருமில்லை கிதிருமில்லை! உன்தம்பி விஸ்வன்! மில்லிலுள்ள நூல்பேல்களை இரண்டு லெட்சம் ரூபாய்க்குத் திருட்டுத் தனமாக பிளாக் மார்க்கட்டில் விற்று விட்டுப் போலீஸில் மாட்டிக்கொள்ளப்பார்த்தான். ஆனால், துர்ப்பாக்கிய ராஜன்! நிரபராதி. அவனைத்தான் எல்லோருமாகச் சேர்ந்து போலீஸில் மாட்டிவைத்துவிட்டோம்...

விமலா:- [அவைகளைக் கூர்ந்து கேட்டு உள்ளம் துடித்து.] ஆ...! சண்டாளப்பாவிகளே...! [என்று கதறி வீழ்ந்து மூர்ச்சை அடைகிறாள்.]

முதலியார்:- ஆ! விமலா!! அடேய் சின்னான்...விசிறி எடுத்தாடா...பத்மா! தண்ணீர் கொண்டாடி...அய்யய்யோ...விமலா!!!

பத்மா:- [தண்ணீர் கொண்டு வந்து முகத்தில் தெளிக்கிறாள்.]

சின்னான்:- [விசிறிகொண்டு வந்து வீசுகிறான்.]

விஸ்வன்:- [வந்து, விமலாவைப் பார்த்துவிட்டு] என்ன நேர்ந்தது இவளுக்கு...?

பத்மா:- ஒன்னுமில்லேடா தம்பி! உன்மாமா என்னிடம், 'ராஜனைப் போலீஸார் திருட்டுக் குற்றத்திற்காகக் கைது செய்துவிட்டார்கள்' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே! திடீரென்று மயக்கம் போட்டுக் கீழே விழுகிறாள்...

முதலியார்:- விஸ்வா! நீ விமலாவிடம் இதைப்பற்றி எல்லாம் ஒன்றும் விசாரிக்காதேப்பா...

விஸ்வன்:- ஏன் விசாரிக்கக் கூடாது? உம் மகளுடைய திருட்டுத்தனத்தை என்னிடம்மறைக்கப் பார்க்கிறீர்! ராஜன் மீது இவளுக்கேன் அவ்வளவு அக்கரை? நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாகி விட்டது!

இவளைக் கலியாணம் செய்ததிலிருந்து ஒரு நாளாவது இவள் மீது என்கை பட்டதுமில்லை! பட விடுவதுமில்லை!! தப்பித்தவறிப் பட்டுவிட்டால், நெருப்புப் பட்டவள்போல் துடிக்கிறாள்!!! இதில் ஏதோ மர்மமிருக்கிறது. இதை உங்கள் முன்னிலையிலேயே அம்பலப்படுத்தாமல் விடப்போவதில்லை!

பத்மா:- விடாதேடா தம்பி! என்ன கொடுமையிது? கட்டிய கணவனுக்கு ஆபத்து வர இருந்தது! அது என்னமோ 'தலைக்கு வந்தது...தலைப்பாகையோடு போச்சுது' என்று சந்தோஷப்படுவாள் உத்தம பத்தினியாக இருந்தாள்!

இவள் என்னடான்னா, ராஜனுக்கு ஆபத்து வந்துவிட்டதே...! கணவன் மட்டும் கல்லாட்டம் இருக்கிறானே என்றல்லவா மயக்கம்போட்டு விழுகிறாள்...எங்கேயாவது உண்டா இந்த அநியாயம்...?

முதலியார்:- இந்தக் கன்றாவியை எல்லாம்! இந்த வயதிலே பார்க்கணும், கேட்கணும் என்று என் தலையிலே...எழுதி இருக்கே...? கருமம் கருமம்...!!

சின்னான்:- [மெதுவா வந்து முதலியார் தலையை எட்டிப்பார்க்கின்றான்]

முதலியார்:- தலையிலே என்னடா பார்க்கிறே...?

சின்னான்:- என்னமோ எழுதியிருக்குன்னீங்களே...?

முதலியார்:- நீ ஒரு வடிகட்டின முட்டாள் பயடா! தலைவிதிக்குத்தானே...தலையிலே எழுதியிருக்கென்று சொல்கிறது!

சின்னான்:- ஓ! அப்படீன்னா... உடம்புவிதிக்கு எப்படீன்னுசொல்றதுங்க?

விஸ்வன்:- உடம்புலே எழுதி இருக்குன்னு சொல்றது! போடா முட்டாள்!!

ரோஜா முத்தையா

# கேட்டிடுங்க!

(கலைவாணரின் "ஜெயிலுக்குப் போய் வந்த" என்ற மெட்டு)

கோயிலுக்குப் போய்வந்த குணமதை மக்களை
கூப்பிட்டு கேட்டிடுங்க—அங்கடைந்த
கேட்டினைச் சொல்லுவாங்க—அதைச்சிலர்
பாட்டா பாடுவாங்க—இன்னும்
தெளிவாய்ச் சொன்னாங்க

அதைத் தெரியவைக்கவே இத்தனை காலமும்
அலைஞ்சு பாக்குறேனுங்க—ஆனாக் கொஞ்சம்
சிரமமாயிருக்குதுங்க
பலன்கண்ட பேர்வழிங்க—கெடுபிடி
பண்ணிவிடப்பாக்குறாங்க—மனுஷனை
கொன்னுப்புடப்பாக்குறாங்க—திருடியே
பொன்னைக்கொண்டும் போவானுங்க—சோம்பேறிங்க
ஊரை விட்டு நாட்டைவிட்டு ஓடி இங்கவந்துட்டு
உல்லாசக்காரராக, பாடுபட்டு, தேடிக்கிட்ட
பணத்தைப்பறிச்சாக்க—அதுசரியாங்க

இல்லவே இல்லைங்க—வழக்கம் வந்தவிதம் கேப்பீங்க
சொல்றேன் கேளுங்க
ஒருசிலர் செய்த சுயபுராணமே உருவமாச்சுதுங்க
அதாலே உண்மையை மறைச்சாங்க
பொய்யையே எழுதிக்காட்டினாங்க
உருட்டும் பெறட்டுமே அவரது உள்ளத்தில்
உரம் பெற்றுப் போச்சுதுங்க—காரணம்
ஒற்றுமையில்லீங்க (நமக்குள்)
அங்கே சட்டைபோட்ட சாஸ்திரிகள் வந்திடுவாங்க
சுத்த சந்நியாசிபோலும் பலர் வந்திடுவாங்க
சல்லாபக்காரர்களும் வந்திடுவாங்க
உண்மைச் சதிபதிகள் சிலரும் வந்திடுவாங்க
அங்கே, சுண்டல் உண்டுங்க—சில பேர்
கிண்டல் கண்டாங்க
சிரிப்பு மூளுங்க—ஆனா அதை
அடக்கவேணுங்க—இன்னுங்கேளுங்க
அங்க படிச்சவங்க படியாதவங்க எப்பவும்
பலர் வந்து கூடுவதும் உண்டுங்க—கும்பிடச்சொல்லி
குருக்களும் வந்து அந்தக் குளுவிலே
குளச்ச சாம்பல் பூசுவாரு நம்புங்க
மணி அடிக்கடி ஆட்டுவாங்க—அதன்படி
அஞ்சலி செய்யோணுங்க
அங்க தேங்காப்பஞ்சம் ஏதுங்க
தேனுப்பஞ்சம் ஏதுங்க
தெட்சணை குறைஞ்சிட்டாங்க—குருக்கள்
தெரிசனமே யில்லீங்க

கூலிக்குப் போகும் ஏழைகளுக்கோர்
குணமே யில்லீங்க—அவ்விடம்
பணமேசெல்லுமுங்க—அந்தக்
குறையைச் சொன்னாங்க
குறும்புக்காரப்பா—இவனென்றென்னையே
குற்றஞ்சாட்டுறாங்க—பணத்தையே
குழுற வைக்குறாங்க.

—"இராசை. பாலகிருஷ்ணன்."

(2ம் பக்கத் தொடர்ச்சி)

நம் நாட்டுச் சரித்திர மேதைகள். ரிக் வேதமும், யஜுர் வேதமும் இவர்களுக்குச் சரித்திரச் சான்றுகளைக் காட்டுகின்றன போலும்! தமிழரசர்களைப் பற்றியும் அவர்கள் வீரத்தைப் பற்றியும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது புறநானூறு; அவர் தம் அக வாழ்வினை எடுத்தியம்புகிறது அகநானூறு. தமிழரது அரசியலைப்பற்றி அறிய விரும்புகிறவர்கள் திருக்குறளில் 'பொருட்பாலை' திருப்பிப் பார்க்கட்டும். வடநாட்டில் மகதத்தை ஆண்ட நந்தர்களைப்பற்றி அகநானூற்றில்,

"பல்புகழ் நிறைந்த
வெல் போர் நந்தர்
நீர் முதற் கரந்த
நிதியங் கொல்லோ"

என்ற சரித்திரக் குறிப்பும் காணப்படுகிறது.

இலெமூரியாக் கண்டம் கடலால் கொள்ளப்படாத காலத்து அங்கு மக்கள் வாழ்ந்தனர். இதைப்பற்றிச் சிலப்பதிகாரத்தில்,

'வடிவேல் எறிந்த
வான்பகை பொறாது
பஃறுளியாற்றுடன்
பன்மலையடுக்கத்துக்
குமரிக் கோடும்
கொடுங்கடல் கொள்ள'

என்ற குறிப்பு காணப்படுகிறது. இந்திய சரித்திரத்தை எழுத ஆரம்பிக்கும் வரலாற்று ஆசிரியனொருவன் முதன் முதலில் மறைந்த கண்டத்தைப் பின் பற்றித்தான் எழுதவேண்டும். இக் கருத்தை மனதில் கொண்டுதான் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள், 'ஆராய்ச்சிக் கண்கொண்ட வரலாற்று ஆசிரியன் நெடுநாள் வழக்கத்தையொட்டி, கங்கைக் கரையில் இந்தியச் சரித்திரத்தைத் தொடங்குவதைவிட காவிரி நதிக்கரையிலோ, கிருஷ்ணா நதிக்கரையிலோ அல்லது வையை நதிக்கரையிலோ ஆரம்பிக்கவேண்டு" மெனக் கூறியுள்ளார். இவர் கூற்றினை நம் இந்தியச் சரித்திர ஆசிரியர்கள் எவரும் கவனிக்காவிடினும் இந்தியச் சரித்திரத்தந்தை 'வின்செண்ட்ஸ்மித்' என்ற ஆங்கிலேயர் அதைப் பொன்போல் போற்றித் தமது 'முற்கால இந்திய வரலாறு' என்ற நூலில் அதற்கு இடமளித்தார்.

திராவிடர்கள் வெளி நாட்டினின்று இந்தியாவிற்குள் வந்தனர் என்று கூறுவதற்குச் சரித்திர ஆசிரியர்கள், வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் பேசப்படும் 'பிராஹுய்' மொழிக்கும், தமிழுக்கும் உள்ள தொடர்பினையும், பண்டைக்காலத்து மக்கள் இறந்தவர்களை வடக்கு நோக்கிப் புதைத்ததையும் ஆதாரமாகக்கொண்டு, திரா

விடர்கள் வடக்கினின்று வந்தவர் என மொழிகின்றனர். இங்கே சரித்திர ஆசிரியர்கள் தமிழ் இலக்கியங்களை அறவே மறுக்கின்றனர். தென்னிந்தியாவின் நாகரீகம் கி. மு. பத்தாம் நூற்றாண்டிற்கு முன்னரே ஏற்பட்டிருக்க வேண்டுமெனப் பேராசிரியர் 'வில்ஸன்' குறிப்பிடுகிறார். இவ்வாறாக, குமரிக்கண்டம் கடலால் கொள்ளப்பட்டபொழுது தென்னாட்டினின்று நம்மக்கள் ஏன் வடநாடு சென்றிருக்கக் கூடாது? ஆரியர் வருவதற்கு முன நம்மக்கள் சிந்து நதிக்கரையில் குடியேறி, அங்கு வியத்தகு நாகரீகத்தினை ஏற்படுத்தினர். 'தமிழர் சரித்திரப்படி அவர்கள் ஆரியர் வருவதற்கு முன் இந்துஸ்தானத்தின் பல இடங்களில் குடியேறினர். ஆரியர் படையெழுச்சிக்குப்பின் அவர்கள் துரத்தப்படவே தென்னாட்டிற்கு வந்தார்கள். சோட்டாநாகப்பூரில் 'சாந்தல்ஸ்' என்பவர்களும், மலையாளத்தில் 'பானியர்' என்பவர்களும் திராவிட இனத்தைச் சேர்ந்தவ''ரென நான் உரைக்கவில்லை; ஆனால் கே. வி. அரங்கசாமி அய்யங்கார் என்ற சரித்திர ஆசிரியர் குறிப்பிடுகிறார். பஞ்சாங்கப்படையெழுச்சி தக்காணத்தில் கி. மு. ஏழாம் நூற்றாண்டில் ஏற்பட்டதென்று அவர் குறிப்பிடுவதினின்று, வில்ஸனுடைய ஆய்வும் சரியென்றே நமக்குப் படுகிறது. 'திராவிடர்' என்பவர்கள் மலைநாட்டு மக்களான கோலர்கள், இருளர்களெனப் பல மரமண்டை படைத்த சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிடினும், திருக்குறளையும், புறநானூற்றையும் நோக்கும் பொழுது, இலக்கிய இலக்கண வரம்புடைய தமிழ் நூல்களை இயற்றிய பெருமக்கள் அறிவிலிகளாக இருக்க முடியாது. கி. மு. அய்ந்தாம் நூற்றாண்டிற்கு முன்னரே ஆரியர் தென்னாட்டில் புகுந்ததால் தான், கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் ஆரிய நாகரீகக் குறிப்புகள் காணப்படுகின்றன.

''தென்னிந்தியாவின் பழங்குடிகள் வில்லவர், மீனவர் ஆவர். மத்திய ஆசியாவினின்று வந்த மிக்க நாகரீகம் பெற்ற 'நாகர்' என்பவர்களால் இவர்கள் வெல்லப்பட்டனர். இந்நாகர்கள் ''திபேத்'' நாட்டினின்று வந்த தாம்ரலிப்டிஸ் அல்லது தமிழர் என்பவர்களால் வெல்லப்பட்டனர். தமிழர்கள் நான்கு பிரிவினராய் கிழக்குக்கரையோரமாகத் தென்னிந்தியாவிற்கு வந்தனர். இவர்களில் 'மாரர்' என்பவர்கள் பாண்டிய அரசை நிறுவினர். வானவர் என்பவர்கள் சேர அரசர்களின் முன்னோர். 'கோசர்' என்பவர்கள் கொங்கு நாட்டினர். நாடு தேடி வந்த தமிழர்கள் பல இனங்களாய், பல காலப் பகுதிகளில் வந்தனர். மேலும் இவர்கள் இந்நாட்டுப் பழங்குடிகளான நாகர், வில்லவர்களைவிட மக்கட் தொகுதியில் குறைந்தவர்கள். காலஞ் செல்லச்செல்ல இந்நாட்டு மொழியைக் கற்க, அதன் பின்னர் அம்மொழியே தமிழாயிற்று. நாகர்கள் சிறந்த நாகரீகம் படைத்த மக்கள். தமிழ் நூல்களில் கூறப்படும் மறவர், எயினர், ஒலியர், அருளவர் ஆகிய கொடுஞ் செயல் புரியும் மக்கள் 'நாகர்' இனத்தைச் சேர்ந்தவராவார்; மேலும் தமிழருக்கும் இவர்களுக்கும் அடிக்கடி பகை மூண்டது.''

இதைப்படித்ததும் உங்கள் மனதில் துன்ப அலைகள் எழும். இருப்பினும் இதை எழுதியவர் கனகசபைப்பிள்ளை என்ற திராவிடர். பல அறிஞர்களால் இவருடைய ஆராய்ச்சி அடியோடு மறுக்கப்படுகிறது. தமிழர் மங்கோலியர் அல்லர். தமிழர் இந்நாட்டுப் பழங்குடிகள்; அவர்கள் ஒரு போதும் திபேத் நாட்டினின்று வந்திருக்க முடியாது. அறிஞர் 'ரிஸ்லி' என்பவர் 'இந்தியாவின் மக்கள்' என்ற தமது நூலில் திராவிடர்கள் இந்நாட்டின் பழங்குடிகளென்றும், சிலோன் முதற்கொண்டு கங்கை நதிவரை அவர்கள் பரவியிருந்தனர்' என்றும் குறிப்பிடுகிறார்.

முடிவாக சரித்திர ஆசிரியர்களே! மாணவர்களே! சிந்திக்கும் திறனுடைய என் தமிழ் மக்களே! வடநாட்டில் பஞ்சாபில் மக்களை மக்கள் கொல்லவும், தென்னாட்டில் ஓரிடத்திலாவது கொலை நிகழாதிருக்கவும் காரணம் என்ன? கைபர் கணவாய் வழியாகப் பஞ்சாபில் வந்து தங்கிய இனங்கள் பல. ஆரியர், கிரேக்கர், பாரசீகர், குஷாணர், சாகர், ஹூணர், மங்கோலியர், முகலாயர் ஆகிய பல இன மக்கள் ஆங்கு வந்து தங்கி, தங்களுக்குள் பல இயைபுகளை ஏற்படுத்தினர். பல மதங்கள், பல கடவுள்கள் தோன்றின. பல நூற்றாண்டுகளாகப் புகைந்து கொண்டிருந்த பகைமை, சுதந்தரம் வாங்கிய மறுநாளே சுடர் விட்டெரியத் தொடங்கியது. புண்ணிய திசையெனப் போற்றப்படுவதும், ஒப்பற்ற அரசியல் வாதிகள், பட்டதாரிகள், தலைவர்கள் இருக்குமிடமுமான அந்த வடநாடு இரத்தச் சேற்றில் மூழ்கியது. அவ்வமயம் நம் திராவிட நாட்டில் ஒரு துளி இரத்தமாவது சிந்தாதிருக்கச் செய்தவர் யார்? சிந்தித்துப் பார்மின்! பார் மின்!! இங்கு அமைதி நிலவுகிறதென்றால் இந்நாட்டு மக்கள் ஓரின மக்கள் என விளங்கவில்லையா? இதற்கு, நம்மிடையே இனவுணர்ச்சியை உண்டாக்கப் பாடுபட்டு வருபவர் யார்? ஆய்ந்து பார்மின்! ஆய்ந்து பார்மின்!!

''பி. சி. என்.''


# குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| இந்தியாவின் குறை பாடுகள் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார்பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம் | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க் கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத் திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திருச்சிப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| திராவிடர்-ஆரியர் உண்மை | 0 | 2 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:-

**நாதன் கம்பெனி லிமிடெட்,**

கச்சேரி வீதி, ஈரோடு.


Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet. ERODE